# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# மானியக் கோரிக்கை எண்.44

## 2019 – 2020

## பா.பெஞ்ஜமின்
### ஊரகத் தொழில் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2019

# உள்ளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 19 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) | 67 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 100 |
| 5. | தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) | 106 |

## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்க குறிப்பு 2019–20

### 1. முகவுரை

இந்திய பொருளாதாரத்தின் நிலைத்த வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிதும் பங்களிக்கின்றன. இந்நிறுவனங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், சமூக, பொருளாதார அதிகாரமாக்குதலை அளித்து, சமுக மேம்பாட்டு வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் பகுதியின் சமச்சீர் வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதுடன், உலகமயமாக்கலால் தனித்தன்மை பெற்று நிதி மற்றும் தொழில்நுட்பம் உடைய பங்குதாரர்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன. மேலும், இந்நிறுவனங்கள் நிலையானதாகவும் மற்றும் தன்னிறைவுடையதாகவும் மட்டுமில்லாமல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, தங்களால் இயன்ற பொறுப்பான வளர்ச்சி விகிதத்தை அளித்திடவும் உதவுகின்றன.

## 1.1 இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

புதிய வணிக உத்திகளைக் கண்டறிவதன் மூலம் தொழில் முனைவோர்களின் தொழில் விரிவாக்கத்தை மேம்படுத்துவதற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலக சந்தை மற்றும் உள்நாட்டு சந்தைகளின் தேவைகளையறிந்தும், பொருளாதார தன்மையையறிந்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பல்வேறு வகையான பொருட்களை அடையாளம் கண்டு, உற்பத்தி செய்வதன் மூலம் தங்களது எல்லைகளை பெரிதும் விரிவாக்கியுள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சுமார் 6,000 வகை பொருட்களை உற்பத்தி செய்கின்றன. தற்போதைய விலை நிர்ணயப்படி நாட்டின் மொத்த உற்பத்தியில் (Gross Value of Output (GVO)) 30% இந்நிறுவனங்களின் உற்பத்தியை சார்ந்துள்ளது. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் ஏற்றுமதியில் 40% அளவிற்கு பங்களிக்கின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில், குறு, சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தற்போதைய 16 விழுக்காடு பங்களிப்பினை, தேசிய உற்பத்திக் கொள்கையில் வரையறுத்தவாறு 25 விழுக்காடு என்ற இலக்கினை 2022இல் அடைய, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்காற்றுகின்றன.

73–வது தேசிய மாதிரி கணக்கெடுப்பானது, பதிவு பெறாத, விவசாயம் சாராத உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவை சார்ந்த 633.92 இலட்சம் நிறுவனங்களின் செயல்திறனை ஆராய்ந்து, அந்நிறுவனங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்துள்ளன என்று குறிப்பிடுகிறது.

## 1.2 தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அபரிமிதமான வளர்ச்சியுடன் தனித்தன்மை கொண்டு பல்வேறு விதமான பொருட்களை தயாரித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் முக்கியமாக, ஜவுளி, பொறியியல் பொருட்கள், தானியங்கி, மின் பொருட்கள், தோல் பொருட்கள், நெகிழிப் பொருட்கள் (பிளாஸ்டிக்) மற்றும் ஆயத்த

ஆடைகள் முதலான பொருட்கள் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

சுமார் **20.13** இலட்சம் தொழில் முனைவோர், சிறு தொழில் சான்று, பதிவறிக்கை பதிவு–**2** மற்றும் உத்யோக் ஆதார் பதிவறிக்கை பதிவு செய்துள்ளன. இதன்மூலம் சுமார் **128.91** இலட்சம் நபர்களுக்கு ரூ.**2,23,783.75** கோடி முதலீட்டில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. **(31.3.2019** வரை**).**

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட உத்யோக் ஆதார் பதிவறிக்கையினைத் தொடர்ந்து, **21.1.2016** முதல் உத்யோக் ஆதார் பதிவறிக்கை செயலாக்கத்திற்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் **31.3.2019** வரை **7,60,901** நிறுவனங்கள் உத்யோக் ஆதார் பதிவறிக்கை பெற்றுள்ளன. இவற்றில் முறையே **6,70,240** குறுந் தொழில் நிறுவனங்கள், **88,355** சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் **2,306** நடுத்தரதொழில் நிறுவனங்கள் ஆகும் **(இணைப்பு–1).**

## 1.3 தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வலுவூட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் புதிய முயற்சிகள்

### 1.3.1 *குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளர தீர்வுக் குழு*

தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு தேவையான தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை விரைவாக பெற்று தருவதற்கு மாவட்டத் தொழில் மையத்தில் செயல்படும் ஒரு முனை தீர்வுக்குழு வாயிலாக விரைந்து பெற்று அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2018–19ஆம் ஆண்டு மாநில அளவில் 479 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் 348 விண்ணப்பங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு, மாநிலத்தில் வணிக நடவடிக்கைகளை எளிதாக்கும் பணியில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. இதனை செயலாக்கும் பொருட்டும் தொழில் முனைவோர் நட்புறவுச் சூழலை உருவாக்கும் பொருட்டும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய வர்த்தக சமூகத்தினருக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிட, இணையத் தொழில்நுட்பம் வாயிலாக ஒற்றைச்சாளரத் தகவு அறிமுகப்

படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒற்றைச் சாளரத் தகவு மூலமாக, நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் போன்ற 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளைப் வழங்குதல் மற்றும் அனுமதிகளைப் புதுப்பித்தல் ஆகிய சேவைகளை பெற இயலும். இவ்வசதியின் மூலம், மனித நேரடித்தொடர்பு இன்றி மேற்படி 11 அரசு துறைகளின் சேவைகளை முதலீட்டாளர்கள், இணையதளம் மூலமாக பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு (https://www.easybusiness.tn.gov.in/msme) 4.5.2018 அன்று தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### 1.3.2 தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் / விதிகள் 2018

தமிழ்நாட்டை இந்தியாவின் மிக முதன்மையான தொழில் முதலீட்டுக் களமாக மாற்றும் உயரிய நோக்கத்துக்கு

துணை செய்யும் விதமாக வணிக நடைமுறைகள் எளிதாக்கும்/ மேம்படுத்தும் சட்டம் 2018 இயற்றப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள், தேவையான விவரங்கள் அடிப்படையில் முதலீட்டு முடிவுகள் எடுப்பதையும், தொழில் நிறுவனங்களை உருவாக்கவும் மற்றும் விரிவாக்கவும் தேவையான உரிமங்கள்/ அனுமதிகள் தொழில் தொடங்கும் முன்பும்/நடத்தும் போதும், உரிய காலமுறையில் பெறப்படவேண்டிய புதுப்பித்தல்கள் உட்பட விண்ணப்பங்கள் ஒரு முனையில் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுவதையும், திறன்மிக்க குறைதீர்ப்பு அமைப்பை உருவாக்குவதையும் உரிய காலகெடுவுக்குள் தகுந்த அதிகாரிகள் உரிய முறையில் செயல்பட தவறும்பட்சத்தில் அவர்களுக்கு தண்டனை விதிப்பதையும் இச்சட்டம் உறுதி செய்கிறது.

இச்சட்டம் தொழில் நிறுவன கட்டுமானத்திற்கு முந்தைய, உற்பத்திக்கு முந்தைய, உரிய அனுமதிகள், புதுப்பித்தல்கள் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட 54 இனங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த ஒற்றைச்சாளர அமைப்பினை செயல்படுத்த மாவட்டத் தொழில் மையங்கள் / அரசுத்துறை தொழில் வழிகாட்டு நிறுவனம் ஆகிய இரு

அலுவலகங்கள் முறையே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு உரிய அமைப்புகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ், ஒற்றைச் சாளர அமைப்பு முறையின் செயல்பாடுகளை சீராய்வு செய்வதற்காக 3 அடுக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய ஒற்றைச்சாளர அமைப்பு
2. மாநில குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய ஒற்றைச்சாளர அமைப்பு
3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய முதலீட்டு மேம்பாடு மற்றும் கண்காணிப்பு வாரியம்

### 1.3.3 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட (UYEGP) மேம்படுத்தப்பட்ட இணைய வழி தகவு

சமுதாயத்தில் பின்தங்கி உள்ளவர்களை முன்னேற்ற, படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை அரசு நடைமுறைபடுத்தி உள்ளது. விண்ணப்பதாரர்கள், நேரடியாக இணையதளம் மூலம்

விண்ணப்பிக்கும் முறை கடந்த **1.8.2017** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது இத்திட்டத் தகவு மேம்படுத்தப்பட்டு, விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய தேவையான ஆவணங்களும் இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து, அலுவலகத்திற்கு செல்லாமலே விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.3.4 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட (NEEDS) மேம்படுத்தப்பட்ட இணைய வழி தகவு

படித்த முதல் தலைமுறை இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்(NEEDS) என்ற திட்டத்தினை இவ்வரசு முதன்மைத் திட்டங்களில் ஒன்றாக செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டமானது, தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்தல், தொழில் தொடங்க திட்டங்கள் தயாரித்தல், நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிக தொடர்பு அமைத்துத்தருதல் போன்றவற்றை அளித்து

வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் மற்றும் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. விண்ணப்பதாரர்கள், நேரடியாக இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

தற்பொழுது இத்திட்டத் தகவு மேம்படுத்தப்பட்டு, விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய தேவையான ஆவணங்களும் இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து அலுவலகத்திற்கு செல்லாமலே விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.3.5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன மானியம் சலுகை திட்ட தகவு (MSME Incentives Portal)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, அரசு முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், பின்முனை வட்டி மானியம் மற்றும் ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும் திட்டம் ஆகிய சலுகைகளை வழங்கி வருகிறது. இத்திட்டங்களில் பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து மானியங்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மையை

உறுதிப்படுத்தும் விதமாக மேற்படி அனைத்து மானியத் திட்டங்களுக்கும் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் விண்ணப்பிப்பது முதல் மானியம் பட்டுவாடா செய்வது வரை அனைத்து நடைமுறைகளும் அலுவலகத்திற்கு செல்லாமலே, நேரடி தொடர்பின்றி இணைய வழியில் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு மானிய சலுகைத் திட்டங்களுக்கு கீழ்க்கண்ட இணைய முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| அ. | முதலீட்டு மானியம்:<br>https://msmeonline.tn.gov.in/incentives/capital/index.php |
| ஆ | குறைந்தழுத்த மின் மானியம்:<br>https://msmeonline.tn.gov.in/incentives/index.php |
| இ. | மின்னாக்கி மானியம்:<br>https://msmeonline.tn.gov.in/incentives/index.php |
| ஈ. | பின்முனை வட்டி மானியம்:<br>https://msmeonline.tn.gov.in/incentives/index.php |
| உ. | ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும் திட்டம்:<br>https://msmeonline.tn.gov.in/incentives/index.php |

### 1.3.6 ஆணையரக சமூக ஊடக வலைதளம் (Facebook, Twitter and Youtube)

தற்போதைய நவீன மின்னியல் உலகில், சமூக ஊடகங்கள் மக்களை எளிதில் சென்றடைய மிக சக்தி வாய்ந்த சாதனம் ஆகும். இத்துறையின் திட்டங்கள், தொழில் முனைவோராக விரும்பும் இளைஞர்களை சென்றடைய, விழிப்புணர்வு ஊட்டுவது அவசியம் ஆகிறது. எனவே, தொழில் வணிகத் துறையின் திட்டங்கள் குறித்து தொழில் முனைவோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதிதாக, சமூக ஊடக வலைதளப் பக்கங்களான பேஸ்புக், டிவிட்டர் மற்றும் யூடியூப் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. இப்பக்கத்தில் ஆணையரகத்தின் தகவல் மற்றும் கருத்துகள் பரிமாற்றம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், தொழில் முனைவோர்களின் கருத்துகள் மற்றும் குறைகள் கேட்டறியப்படுகிறது. இதனால் இத்துறை அமல்படுத்தும் திட்டங்களை மாற்றியமைக்கவும், மேம்படுத்திடவும் புதிய வழிவகை ஏற்படும்.

## 1.4 நிலையான நீடித்த வளர்ச்சி இலட்சியத்திற்கான புதிய முயற்சி

2030ஆம் ஆண்டிற்குள் அனைத்துப் பரிமாணங்களிலும் வறுமையை முடிவுக்கு கொண்டுவரவும், சமமான, நியாயமான மற்றும் பாதுகாப்பான உலகினை உருவாக்கிடவும், நிலையான நீடித்த வளர்ச்சி இலக்கானது (SDG Goals) ஒரு துணிவான உலகளாவிய ஒப்பந்தத்தை இப்புவி வாழும் மக்களின் வளத்திற்காக உருவாக்கியுள்ளது.

2015 செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில், உலகளாவிய ஒருங்கிணைந்த மற்றும் மாற்றத்திற்கான செயல் திட்டம் ஒன்றை, 193 உறுப்பு நாடுகள் முறையாக ஏற்றுக்கொண்டு, ஜனவரி 1, 2016இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

உலகம் முழுவதும் பன்னாட்டு அரசுகள் மற்றும் இலட்சக்கணக்கான மக்களை ஒருங்கிணைத்து செயல்முறை ஆலோசனை மற்றும் பேச்சுவார்த்தை மூலம் வளர்ச்சிக்கான, நிலையான, நீடித்த வளர்ச்சி இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தச் செயல் திட்டம் 17 வகையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியங்களும், அதன்கீழ் 169

இலக்குகளையும் ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நாடும் இந்த இலட்சியத்தை 2030ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தி அதில் வெற்றிபெற வேண்டுமென்பதே முக்கியக் குறிக்கோளாக இருக்கிறது.

குறிப்பிட்ட குறிகாட்டியின் வளர்ச்சிக்காக, தமிழ்நாடு அரசின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை இலக்கு 8 மற்றும் 9இன் கீழ் உள்ளூர் சவால்கள், திறன்கள் மற்றும் வளங்களின் இருப்பிற்கு ஏற்ப, இலக்குகளைத் தனிபயனாக்குபவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள் 8 மற்றும் 9 பின்வருமாறு:

**இலக்கு 8: பொருளாதார மேம்பாடு, கண்ணியமான வேலைவாய்ப்பு**

2030ஆம் ஆண்டிற்குள் அனைத்து பிரிவு மக்களுக்கும் நிலையான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, உற்பத்தியை (வேலைகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு மூலம்) அதிகரித்தல், மற்றும் கண்ணியமான பணிச் சூழலை அடைதல்.

**இலக்கு 9: நெகிழ் உட்கட்டமைப்பு உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை வளர்த்தல்:**

2030ஆம் ஆண்டிற்குள் முதலீட்டை ஈர்ப்பதற்கு, உகந்த உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் தொழில் முன்னேற்றத்தை கொண்ட பொருளாதார வளர்ச்சியை உருவாக்குதல்.

உலகளவில் நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையானது, முக்கிய பங்கு வகிக்கிறது. இதுமட்டுமல்லாமல், பன்முகத்தன்மை கொண்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையானது, உயர் வருமானம் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும், பொதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை தொழில்துறைகளில் புத்தாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான நீடித்த வளர்ச்சியில் கவனம் கொண்ட இலக்கு 8 மற்றும் 9 அடைய முக்கிய பங்காற்றுவதுடன் மற்ற நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளிலும் முக்கியப் பங்காற்றிவருகிறது.

தமிழக சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையரகமானது, நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியங்களைப் பரவலாக்க ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு தொடக்கமாக இலக்கு 8 மற்றும் 9இன் கீழ் உள்ள குறிகாட்டிகளின் மீது கவனம் செலுத்தி அதனை அடைவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த குறிகாட்டிகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் பங்களிப்புடன் முறைப்படுத்தி செயல்படுத்திட முயற்சிகள் எடுத்து வருகிறது.

## 1. 5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வரையறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் படி, நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பீட்டின் (நிலம் மற்றும் கட்டடங்கள் நீங்கலாக) அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பின் வருமாறு வகைபடுத்தப்பட்டுள்ளன.

| வகைப்பாடு | உற்பத்தி நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு | சேவை நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு |
|---|---|---|
| குறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சம் வரை. | ரூ.10 இலட்சம் வரை. |
| சிறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை. | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை. |
| நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை. | ரூ. 2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை. |

## 1.6 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையில் கீழ்கண்ட முக்கிய அலுவலகம் / நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

அ) தொழில் வணிக ஆணையரகம் (Commissionerate of Industries and Commerce)

ஆ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamil Nadu Small Industries Development Corporation Ltd. (TANSIDCO))

இ) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (Tamil Nadu Small Industries Corporation Ltd.(TANSI))

ஈ) தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (Entrepreneurship Development and Innovation Institute – Tamil Nadu (EDII-TN))

உ) தாய்கோ வங்கி / இன்கோசர்வ் மற்றும் சேகோசர்வ் (TAICO Bank / INDCOSERVE / SAGOSERVE) போன்ற தொழில் கூட்டுறவு நிறுவனங்கள்

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம் பொதுவாக மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், ஒருங்கிணைந்த தலைமையகமாக விளங்குகிறது. மாநிலத்திலுள்ள 32 மாவட்ட தொழில் மையங்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட தொழில் மையங்கள் மாவட்ட அளவில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு உகந்த தொழில்களைக் கண்டறிதல், தொழில் திட்ட அறிக்கையினைத் தயாரித்தல், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல்களைப் பெற்று அளித்தல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல், உள்ளிட்ட பணிகளைச் செய்து வருகின்றன.

## 2.1 உத்யோக் ஆதார் பதிவறிக்கை

தொழில் தொடங்குவதை எளிதாக்குதல் எனும் இலக்கை எளிதில் அடைய உத்யோக் ஆதார் எண் பதிவு முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் தங்கள் உத்யோக் ஆதார் குறிப்பாணையினை பதிவேற்றம் செய்வதற்கு மைய அரசின் **18.9.2015** நாளிட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. இதற்கு எந்த ஒரு கட்டணமும் இல்லை. மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையால் பராமரிக்கப்படும் http://udyogaadhaar.gov.in எனும் வலை தளத்தில் உத்யோக் ஆதார் குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய முடியும். இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய இயலாத சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மைய மேலாளர்கள் விபரங்களை பெற்று, தொழில் முனைவோர் சார்பாக இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யலாம். உருவாக்கப்பட்ட உத்யோக் ஆதார் எண், சம்பந்தப்பட்ட தொழில் முனைவோருக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சட்டம் **2006**இன்படி, EM பகுதி-2 பதிவு பெற்றவர்கள் அல்லது சிறுதொழில் முனைவோராக பதிவுச் சான்றை வைத்துள்ளவர்கள், இந்த உத்யோக் ஆதார் எண்ணை பெற வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் விருப்பப்பட்டால் அவர்களும் இதனை பதிவேற்றம் செய்யலாம்.

**உத்யோக் ஆதார் பதிவறிக்கை**

| நிறுவனங்கள் | உத்யோக் ஆதார் வகை | பிரிவு | இயந்திரம் / தளவாடங்கள் முதலீட்டு அலகு |
|---|---|---|---|
| குறு நிறுவனங்கள் | A | உற்பத்தி | ரூ. 25 இலட்சத்திற்கு மிகாமல் |
| | D | சேவை | ரூ. 10 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | B | உற்பத்தி | ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.5 கோடி வரை |
| | E | சேவை | ரூ.10 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.2 கோடி வரை |
| நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் | C | உற்பத்தி | ரூ.5 கோடிக்கு மேல்<br>ரூ.10 கோடி வரை |
| | F | சேவை | ரூ.2 கோடிக்கு மேல்<br>ரூ.5 கோடி வரை |

## 2.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, அரசு கீழ்க்காணும் சலுகைத் திட்டங்களை வழங்கி வருகிறது:

### 2.2.1 முதலீட்டு மானியம்

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை

- மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர், தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில், தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் 5 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம்

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்

- வேலைவாய்ப்புகளைப் பெருக்க மானிய திட்டத்தின் கீழ் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் **5** விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.**5** இலட்சம் வரை மானியம்

**அடிப்படைத் தகுதி**

- தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் நிறுவப்படும் அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்காணும் **13** சிறப்பு வகை உற்பத்தி தொழில் நிறுவனங்கள் கூடுதல் முதலீட்டு மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் நீங்கலாக:

  - மின் மற்றும் மின்னணு பொருள்கள்
  - தோல் மற்றும் தோல்பொருள்கள்
  - வாகன உதிரிப் பாகங்கள்
  - மருந்து மற்றும் மருத்துவப் பொருள்கள்
  - சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
  - ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
  - மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்
  - விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள்

- சிக்கன அடக்கவிலை கட்டுமானப் பொருட்கள்
- ஆயத்த ஆடைகள்
- உணவுப் பதப்படுத்துதல்
- நெகிழி (பிளாஸ்டிக்)
- ரப்பர் பொருட்கள்

➢ தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய **251** வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்

➢ மாநிலத்தின் **385** வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

➢ மேற்கண்ட வகையைச் சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் துவங்கும் பொழுது

➢ **2011–12** முதல் **2018–19** வரை **14,842** பயனாளிகளுக்கு ரூ.**93,000.00** இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2018–19** இல் மட்டும் **4,338** பயனாளிகளுக்கு ரூ.**36,000** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.1).**

### 2.2.2 குறைந்தழுத்த மின் மானியம்

20 விழுக்காடு குறைந்த அழுத்த மின் மானியம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வணிக ரீதியாக உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து **36** மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

**அடிப்படைத் தகுதி**

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தின் **385** வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண் சார் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்
- தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய **251** வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்

- மேற்கண்ட வகையைச் சார்ந்து, தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்களைத் தொடங்கும் நிறுவனங்கள்

2011-12 முதல் 2018-19 வரை 8,164 பயனாளிகளுக்கு ரூ.**4,964.16** இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2018-19இல் மட்டும் **856** பயனாளிகளுக்கு ரூ.**700** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.2).**

**2.2.3 மின்னாக்கி மானியம்**

இம்மானியத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்பட்டுள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் **25** விழுக்காடு **(320** KVA வரை**)** அதிகபட்சமாக ரூ.**5** இலட்சம் வரை மின்னாக்கி மானியம் வழங்கப்படும்.

2011-12 முதல் 2018-19 வரை 8,759 பயனாளிகளுக்கு ரூ.**10,148.19** இலட்சம் மின்னாக்கி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2018-19இல் மட்டும் **176** பயனாளிகளுக்கு ரூ.**200.10** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.3).**

### 2.2.4 பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் ஆகியவற்றிற்காக வாங்கும் ரூ.1 கோடி வரையிலான கடன்களின் மீது, 5 ஆண்டுகளுக்கு 3 விழுக்காடு என்ற அளவில், அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துவதற்காக, கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டத்தின் கீழ் பெறும் காலக்கடன்களுக்கும், 3 விழுக்காடு பின்முனைவட்டி மானியம் வழங்கப்படும்.

1. 2011–12 முதல் 2018–19 வரை 612 பயனாளிகளுக்கு ரூ.518.33 இலட்சம் வரை தொழில்நுட்ப மேம்பாடு, நவீனமயமாக்கல் – பின்முனை வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2018–19இல் மட்டும் 113 பயனாளிகளுக்கு ரூ.39.98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.4 (அ)).**
2. 2011–12 முதல் 2018–19 வரை 503 பயனாளிகளுக்கு ரூ.119.44 இலட்சம் – கடன் உத்தரவாத நிதிக்குழும திட்ட

– பின்முனை வட்டி மானியம் வழங்கப் பட்டுள்ளது. நிதியாண்டு **2018–19**இல் மட்டும் **196** பயனாளிகளுக்கு ரூ.**40.00** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது**(இணைப்பு 2.4 (ஆ).**

### 2.2.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம் (PEACE)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தப்படும் ஆற்றலை தணிக்கை செய்து, ஆற்றலை சேமித்து, நிறுவனத்தின் லாபத்தை அதிகப்படுத்தி, சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் வகையில் அரசானது ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் (PEACE) என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் பயனாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை கட்டணத்தில் **50** விழுக்காடு வரை மானியமாகவும், ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம், நிறுவப்படும் எந்திரங்களுக்கு **25** விழுக்காடு மானியமாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் நான்கு முக்கிய கூறுகளாவன

அ) விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல்

ஆ) பயிற்சி அளித்தல்

இ) விரிவான ஆற்றல் தணிக்கைக்கான ஊக்கத் தொகை

ஈ) ஆற்றல் தணிக்கை அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறை படுத்துவதற்கான ஊக்கத்தொகை

i. **ஆற்றல் தணிக்கைக்கான ஊக்கத்தொகை**

ஆற்றல் தணிக்கைக் கட்டணத்தில் **50** விழுக்காடு மானியமாக, அதிகபட்சம் ரூ.**75,000/–** வரை வழங்கப்படுகிறது.

ii. **ஆற்றல் தணிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்கத்தொகை**

ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம் மற்றும் நிறுவப்படும் எந்திரங்களுக்கு **25** விழுக்காடு வரை மானியமாக, அதிகபட்சம் ரூ.**2,00,000/–** வரை வழங்கப்படுகிறது.

## 2.3 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Umemployed Youth Employment Generation Programme (UYEGP))

சமுதாயத்தில் பின்தங்கி உள்ளவர்களை முன்னேற்ற, படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை அரசு நடைமுறைபடுத்தி வருகின்றது. இத்திட்டம் உற்பத்தி / சேவை / வியாபார நிறுவனங்கள் தொடங்கிட முறையே அதிகபட்சம் ரூ.10 இலட்சம் / ரூ.3 இலட்சம் / ரூ.1 இலட்சம் வரையான திட்டங்களுக்கு பொருந்தும். திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.1,25,000 வரை அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது. விண்ணப்பதாரர்கள், நேரடியாக இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை, கடந்த 1.8.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பயன்பெற, விண்ணப்பதாரர்கள் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

| தகுதிகள் | |
|---|---|
| குறைந்தபட்ச வயது வரம்பு<br>அதிகபட்ச வயது வரம்பு | 18 வயது<br><br>35 வயது வரைக்கும்<br>(பொது பிரிவினர்) |
| சிறப்பு பிரிவினர் | 45 வயது வரைக்கும்<br>(தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பெண்கள்/மாற்றுத்திறனாளிகள்/ முன்னாள் இராணுவத்தினர் / திருநங்கைகள்) |
| கல்வித் தகுதி | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்(UYEGP) கீழ் 2011–12 முதல் 2018–19 வரை, 37,880 பயனாளிகளுக்கு ரூ.18,698.14 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2018–19–இல் மட்டும் 4,298 பயனாளிகளுக்கு ரூ.2,756.59 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 2.5)**

## 2.4 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur-Cum-Enterprise Development Scheme (NEEDS))

படித்த இளைஞர்களை, முதல் தலைமுறை தொழில் முனைவோராக்கும் நோக்கத்துடன் 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்' 2012–13 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பயனாளிகளின் வயது வரம்பு பொது பிரிவினருக்கு 21 வயதுக்கு மேல் 35 வயது வரையிலும், சிறப்பு பிரிவினர் மற்றும் பெண்களுக்கு 21 வயது முதல் 45 வயது வரையிலும், அவர்கள் ஏதாவது ஒரு பட்டப்படிப்பு, பட்டய படிப்பு, ஐடிஐ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழிற் பயிற்சி சான்றிதழ் படிப்பு முடித்தவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டின் படி, ஒவ்வொரு ஆண்டும் 1,000 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால், தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மொத்த பயனாளிகளில்,

50 விழுக்காடு அளவுக்கு மகளிர் பயன்பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பயனாளிகள் தங்கள் உற்பத்தி மற்றும் சேவைத் தொழில் நிறுவனங்களைத் தொடங்க திட்ட அறிக்கைத் தயாரிக்கவும் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்(TIIC) ஆகியவற்றிடமிருந்து காலக்கடன் பெறுவதற்கும், அனைத்து விதமான உதவிகளும் செய்யப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகளிலுள்ள மனைகள் / தொழிற்கூடங்களில் இடம் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கப்படும்.

திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25 விழுக்காடு தனிநபர் முதலீட்டு மானியமாக (ரூ 30.00 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்குவதோடு, வங்கிக் கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு பின் முனை மானியமாக, திரும்பச்செலுத்தும் காலம் முழுவதும் வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீடு குறைந்த பட்சம் ரூ10.00 இலட்சமாகவும் அதிகபட்சம் ரூ. 5.00 கோடியாகவும் உள்ளது. திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பாக பொதுப் பிரிவினருக்கு 10 விழுக்காடும், சிறப்பு பிரிவினர்/

பட்டியலிடப்பட்ட பிரிவினருக்கு **5** விழுக்காடும் இருத்தல் அவசியம்.

மாநில அளவில் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் துறையாக தொழில் ஆணையரகம் விளங்குவதால், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களால், இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சீரான கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து **31.3.2019** வரை ரூ.**381.77** கோடி அரசு மானியம் பெறத்தக்க ரூ.**1,780.06** கோடி திட்ட மதிப்பீட்டிலான **3,559** திட்டங்களுக்கு இறுதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது வரை தனிநபர் முதலீட்டு மானியமாக ரூ.**305.49** கோடியும், **3** விழுக்காடு பின் முனை வட்டி மானியமாக ரூ.**22.71** கோடியும் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 2.7)

## 2.5 தொழில் நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்கண்ட திட்டங்கள் வாயிலாக அரசு உதவி வழங்கி வருகின்றது.

- உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்த்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ. 2.00 இலட்சம் மானியம்.

- வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ. 25,000/– இதில் எது குறைவானதோ.

- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறுகருவி மையங்கள் அமைப்பதற்கு, அவற்றின் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ. 1.00 கோடி வரை மானிய உதவி.

- தூய்மையான மின் திறனுள்ள தகவல் தொழில்நுட்பம் சார்புடைய தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

- திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகங்களை உருவாக்கி, அதன் மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு மேற்கொள்ள, ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகம் / நேர்த்திமிகு மையத்திற்கும் ரூ. 50 இலட்சம் வரை மானிய உதவி.

## 1.6 பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Prime Minister's Employment Generation Programme (PMEGP))

மைய அரசு, புதிய குறுந்தொழில்களை உருவாக்க, 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' **(PMEGP)** எனும் திட்டத்தை **2008–09** முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சமாக ரூ.**25** இலட்சமும், சேவை தொழில்களுக்காக ரூ.**10** இலட்சமும் திட்ட மதிப்பீடாக இருக்க வேண்டும்.

திட்ட மதிப்பீட்டில் தனது பங்களிப்பாக பொது பிரிவில் **10** விழுக்காடும், சிறப்பு பிரிவினர் (பட்டியலிடப்பட்ட இன / பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர் / முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்கு பகுதியினர் மலை மற்றும் எல்லைப் பகுதியினர்) **5** விழுக்காடும் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகை, காலக் கடனாக வங்கிகள் மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பும் பயனாளிகள் www.kviconline.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். மைய அரசு பயனாளிகளுக்கு கீழ்கண்ட விகிதாச்சாரத்தில் மானியங்களை வழங்கி வருகின்றது.

| பிரிவு | நகர்புறம் | கிராமப்புறம் |
|---|---|---|
| பொதுப்பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 15% | திட்ட மதிப்பீட்டில் 25% |
| சிறப்புப் பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 25% | திட்ட மதிப்பீட்டில் 35% |

'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' (PMEGP) கீழ், **2011–12** முதல் **2018–19 (31.03.2019** முடிய**)** வரை, **12,320** பயனாளிகளுக்கு ரூ.**26,678.39** இலட்சம் **விளிம்புத் தொகை** மானியமாக வழங்கப்பட்டுள்ளது. **2018–19**இல் **2,628** பயனாளிகளுக்கு ரூ.**6,027.94** இலட்சம் **விளிம்புத் தொகை** மானியமாக வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.6).**

## 2.7 சந்தை வாய்ப்பு உதவி

அரசு குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகளை விரிவாக்கம் செய்துள்ளது.

- ஒப்பந்த புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு வழங்கப்படும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.
- இம்மாநிலத்திலும் மற்ற மாநிலத்திலும் நடைபெறும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் **50** விழுக்காடு மானியமாக வழங்குதல்.

- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்.
- உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தபட்சம் **25** விழுக்காட்டை அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

## 2.8 நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் காணப்படும் நிதி சிரமங்களை சீரமைக்கவும் மற்றும் அந்நிறுவனங்களை மேம்படுத்தி வளர்ச்சியடையச் செய்யும் வகையில் எளிதான மற்றும் விரைவான வழிவகைகளை உண்டாக்கும் நோக்கில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைக்க மற்றும் மறுசீரமைப்புக்கான கட்டமைப்பை இந்திய அரசின் அரசிதழின் மூலம் **29.5.2015**– அன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இருப்பினும், மத்திய

ரிசர்வ் வங்கியானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து வங்கிகளுடன் இணக்கமான முறையில் செயல்பட தற்போதுள்ள நடைமுறை வழிகாட்டுதலிலுள்ள வருமான அங்கீகாரம், சொத்துகளை வகைப்படுத்துதல் மற்றும் கடன் வழங்குவதற்கான வழிமுறைகளை வங்கிகள் எளிதாக செயல்படுத்த மத்திய ரிசர்வ் வங்கி சில வழிவகை செய்துள்ளது. அதனடிப்படையில், வங்கிகளால் வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகையான ரூ.25 கோடி வரை உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, திருத்திய புனரமைப்பு விதிளை மாற்றம் செய்து, வங்கிகள் நிதி சிரமங்களில் உள்ள நிறுவனங்களை முன்னதாக கண்டறிந்து உடன் மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

## 2.9 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவி

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கடன் உதவிகள் பெற, வணிக வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை ரூ.35,230.84 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இதில் மொத்தம்

வழங்கப்பட்ட முன்பணத்தொகையில் குறுந்தொழில்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட முன்பணத்தொகை ரூ.16,747.13 (47.54 விழுக்காடு) ஆகும்.

## 2.10 மாவட்ட தொழில் நிறுவன வளர்ச்சி ஆலோசனைக்குழு

1. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் விற்பனை செய்த பொருள்களுக்கு உண்டான தொகையை கால தாமதமின்றி உடன் பெற்றுத்தர போதிய வசதி வாய்ப்புகளை உருவாக்குவது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் நோக்கங்களில் ஒன்றாகும்.

2. இது சம்பந்தமாக அரசு, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

3. கடந்த நிதியாண்டு 2018–19 இல் 38 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, 104 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையான ரூ. 1,218.62 இலட்சம் பெற்றுத்தரப்பட்டுள்ளது.

| வருடம் | கு.சி.தொ.நி. வசதியாக்க குழு அமர்வுகள் | தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட நிலுவை தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 2011–2012 | 15 | 38 | 233.86 |
| 2012–2013 | 35 | 115 | 396.65 |
| 2013–2014 | 18 | 62 | 556.52 |
| 2014–2015 | 27 | 45 | 233.93 |
| 2015–2016 | 09 | 12 | 78.57 |
| 2016–2017 | 28 | 99 | 1,924.49 |
| 2017–2018 | 24 | 83 | 829.65 |
| 2018–2019 | 38 | 104 | 1,218.62 |
| மொத்தம் | 194 | 558 | 5,472.29 |

## 2.11 சோதனை சேவைகள்

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பரிசோதனைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிடும் பொருட்டு கீழ்கண்ட ஆய்வுக்கூடங்கள் சேவை செய்து வருகின்றன:–

(I) மத்திய மின்பொருள் சோதனை மையம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்.

(II) இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி மற்றும் மண்டல சோதனை ஆய்வுக்கூடங்கள், மதுரை,

கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து இடங்களில் இரசாயன பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள காக்களூரில் குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் நிறுவனங்கள் மற்றும் தரக்குறியீடு நிறுவனங்களின் தேவைக்காக, தமிழக அரசால் **1973**ஆம் ஆண்டில் மத்திய மின் பொருள் சோதனைக்கூடம் அமைக்கப்பட்டது. இந்த சோதனைக்கூடமானது, சோதனைக் கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (N.A.B.L.) மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை மற்றும் இந்திய தர நிர்ணய மையம் (B.I.S.) மத்திய நுகர்வோர் அமைச்சகம் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த சோதனைக்கூடத்தில் **160** வகையான மின் உதிரிபாகங்கள் மற்றும் மின் சாதனங்கள், இந்திய தரக்குறிப்பேட்டின்படி சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக்கூடத்தின் சோதனை அங்கீகாரங்களைத் தொடர்ந்திட ஏதுவாகவும், மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு

தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் பொருட்டும், ஆய்வுக்கூடமானது தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

தரக்கட்டுப்பாட்டு ஆணை செயலாக்க மைய அதிகாரிகளால் சந்தையில் சேகரிக்கப்படும் மின்பொருட்களும், இந்த ஆய்வுக்கூடத்தில் சோதனை செய்யப்படுகின்றன. தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு மின் சாதனங்கள் கொள்முதல் பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாகவும் இந்த ஆய்வுக்கூடம் விளங்குகின்றது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பரிசோதனை தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இரசாயன பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன.

## 2.12 பயிற்சி நிலையங்கள்

தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டிற்காக இத்துறையின் பயிற்சியினை கீழ்கண்ட பயிற்சி நிலையங்கள் வழங்கி வருகின்றன.

**2.12.1 அரசினர் தொழில் நுட்ப பயிலகம், கிண்டி, சென்னை**

கிண்டி, அரசினர் தொழில் நுட்ப பயிலகம் 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இப்பயிலகம் பொறியியல் கல்வியில் மூன்று ஆண்டு பட்டயப்படிப்புகளை கீழ்க்கண்ட பிரிவுகளில் வழங்கி வருகிறது.

1. கருவி மற்றும் அச்சு பொறியியல்
2. குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல்

இப்பட்டயப்படிப்புகளை அனைத்திந்திய தொழில் நுட்பக்கல்விக் கழகத்தினுடைய அங்கீகாரத்துடன் வழங்கி வருகின்றது. ஆண்டுதோறும் 3 ஆண்டு பட்டயப்படிப்புகளுக்காக 144 மாணவர்கள் (120 மாணவர்கள் முதலாம் ஆண்டு + 24 மாணவர்கள் நேரடி இரண்டாம் ஆண்டு) சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பின்படி, அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தினுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வண்ணம், கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசு ஒதுக்கிய ரூ.7.02 கோடியில் கட்டிடம் கட்டப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### 2.12.2 கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்

திண்டுக்கல் கருவி பொறியியல் பயிலகம் **1961**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பயிலகம் பொறியியல் பட்டயப்படிப்பில் **3** ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப் படிப்பை அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தினுடைய அங்கீகாரத்துடன் வழங்கி வருகின்றது. ஆண்டுதோறும் **3** ஆண்டு பட்டயப்படிப்பிற்காக **54** மாணவர்கள் **(45** மாணவர்கள் முதலாம் ஆண்டு + **9** மாணவர்கள் நேரடி இரண்டாம் ஆண்டு) சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

### 2.12.3 பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாச்சலம்

விருத்தாச்சலத்தில் இயங்கி வரும் பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பீங்கான் தொழில் நுட்பவியலில் **3½** ஆண்டு பட்டயப் பயிற்சி வழங்கி வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு தேறிய **50** மாணவர்கள் முதலாமாண்டிலும், பன்னிரண்டாம் வகுப்பு தேறிய **10** மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் பிற்சேர்க்கையாகவும், இக்கல்லுாரியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி

நிலையம் அகில இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் அனுமதி பெற்று தொழில்நுட்ப இயக்ககத்தின் கீழ் இணைந்து இயங்கி வருகின்றது.

### 2.12.4 அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அறிவியல் கண்ணாடிக் கருவிகள் பயிற்சி மையம், 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் ஓராண்டு செய்முறை மற்றும் இரண்டு மாத குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கி வருகின்றது.

## 2.13 அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்.

அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூரில் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, இயங்கி வருகின்றது. இந்த நிறுவனம் சுகாதாரத் துறை, தடய அறிவியல் துறை மற்றும் வேளாண்மை துறை ஆய்வகங்களுக்கு தேவையான ஆய்வக கண்ணாடி பொருட்களைத் தயாரித்து வருகின்றது.

## 2.14 தொழில் முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

சிறந்த சிறு தொழில் முனைவோர்களுக்கான விருதுகள் மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள் கீழ்கண்ட பிரிவுகளில் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

1. சிறந்த தொழில் முனைவோருக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.15,000/–.

2. சிறந்த தொழில் முனைவோருக்கான வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.15,000/–.

3. சிறந்த தொழில் முனைவோருக்கான உற்பத்திப் பொருளின் தரம் மற்றும் ஏற்றுமதிக்கான மாநில விருது ரூ.50,000/– மற்றும் நினைவுப்பரிசு ரூ.15,000/–.

4. சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான மாநில விருது **ரூ.50,000/–** மற்றும் நினைவுப்பரிசு **ரூ.15,000/–.**

5. சிறந்த தொழில் முனைவோருக்கான மாவட்ட அளவிலான நினைவுப்பரிசு **ரூ.15,000/–**(ஒவ்வொரு மாவட்டத்திற்கும்).

**முன்னோடி வங்கிகளுக்கான முதலமைச்சர் விருது:**

1. முதல் பரிசு (நினைவுப்பரிசு) **ரூ.30,000/–**
2. இரண்டாம் பரிசு (நினைவுப்பரிசு) **ரூ.20,000/–**
3. மூன்றாம் பரிசு (நினைவுப்பரிசு) **ரூ.15,000/–**

## 2.15 உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2019

**2019**–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **23** மற்றும் **24** ஆம் தேதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடந்த இரண்டாவது உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் **12,360** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் **ரூ.32,205.75** கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தொழில் முனைவோர்களுக்கு அரசு மூலம் கடனுதவி பெற

சம்பந்தப்பட்ட துறை மூலமாக சட்ட பூர்வமான அனுமதி பெறவும், தகுதியான ஊக்கத்தொகை பெற்றுத் தரவும் உறுதி வழங்கப்பட்டது. அதன்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சட்ட பூர்வமான அனுமதிகள், தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டத்தின்படி உரிய கால கெடுவிற்குள் அளித்திட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது.

**31.03.2019,** அன்றைய தேதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட **612** நிறுவனங்கள் ரூ.**929.12** கோடி முதலீட்டில், தொழில் நிறுவனங்கள் அமைத்து அதன் மூலம் உற்பத்தி தொடங்கி **8,994** நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கியுள்ளன.

## 2.16 தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

இத்துறையின் மூலம் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், தொழில்நுட்பத் தொழிலாளர்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தை

வாய்ப்பு தொடர்பான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் இன்ட்கோசர்வ், சேகோசர்வ், டீசர்வ் போன்ற சங்கங்கள் மிக முக்கியமானவைகளாகும். இச்சங்கங்களுக்கு போதுமான நிதியுதவிகளை வழங்குவதற்கு ஏதுவாக ஒரு நிதி நிறுவனம் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி) என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டது.

## 2.17 இன்ட்கோசர்வ்

'இன்ட்கோசர்வ்' என்று பொதுவாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகளின் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் 1965–ல் குன்னூரில் நிறுவப்பட்டது. தலைமை நிறுவனமாக விளங்கும் இச்சங்கம் தமது உறுப்பினர் தொழிற்சாலைகளின் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். இச்சங்கம் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சேமிப்பு கிடங்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மூலப்பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் உற்பத்தி செய்யப்படும் தேயிலை

தூளினை சந்தைப்படுத்துதல் போன்ற சேவைகளையும் வழங்கி வருகின்றது.

நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 16 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் 26,331 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. வருடத்திற்கு 200.00 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு மாநிலத்தின் மொத்த தேயிலைத்தூள் உற்பத்தியில் 13 விழுக்காடாகும்.

தேயிலைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பெரும்பாலும் 1950 முதல் 1980 வரை தொடங்கப்பட்டவையாகும். மேலும், புதிய மேம்படுத்தப்பட்ட சேவைகள் இத்தேயிலைத் தொழிற் சாலைகளின் உற்பத்தியை மேம்படுத்த அவசியமாகும். இத்தகைய புதிய மேம்படுத்தப்பட்ட தேவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய தேயிலை தொழிற் கூட்டுறவு தொழிற்சாலை, நஞ்சநாடு பகுதியில் ரூ.5.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 30.12.2017இல் தொடங்கப்பட்டது.

## 2.18 விலை நிலை நிறுத்தல் நிதியம் ஏற்படுத்துதல்

தேயிலை சந்தையில் ஏற்படும் பெரும் விலை சரிவினால் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு, அவைகள் மாதந்தோறும் மிகப் பெரிய நட்டம் ஏற்படுகின்ற சூழ்நிலைகளுக்கு தள்ளப்பட்டு, அதன் காரணமாக தங்களின் உறுப்பினர்களான சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு உரிய விலையினை வழங்க இயலாத சூழ்நிலை அவ்வப்போது ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் சிக்கல்களுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, அரசானது ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் விலை நிலைநிறுத்தும் நிதியத்தினை அமைத்து, அதில் தனது பங்காக ரூ.8.00 கோடியை 2014–15ஆம் ஆண்டுக்கான ஒரே தவணையில் தொடராச் செலவினமாகவும், மீதி ரூ.4.00 கோடியை இண்ட்கோசர்வ் தனது பங்காகவும் வழங்கியுள்ளன. தற்போது வரை ரூ.20.06 கோடி சுமார் 18,000 தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2017–2018 ஆம் ஆண்டிற்கு தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 வீதம் ஆதார விலையாக ரூ.8.00 கோடியை மானியமாக தமிழக அரசு வழங்கியது. மீதமுள்ள ரூ.4.00 கோடி இண்ட்கோசர்வால் வழங்கப்படும்.

## 2.19 டீசர்வ்

'டீசர்வ்' என்று பரவலாக அழைக்கப்படும் தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கமானது, குன்னூரில் அமைக்கபட்ட நாட்டின் முதல் மின்னணு தேயிலை ஏல மையமாகும். இச்சங்கம் 2002–ல் பதிவு செய்யப்பட்டு, 2003 முதல் செயல்படத் தொடங்கியது. தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், எஸ்டேட் தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ ஆகியோர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். தேயிலை ஏல முறையில் நியாயமான, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் மூலம் உற்பத்தியாளர்களின் தேயிலைத் தூளுக்கு அதிக விலை கிடைக்க செய்வதுடன், அதன் மூலம் சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும் வழிவகை செய்கிறது.

## 2.20 சேகோசர்வ்

''சேகோசர்வ்' என்று பொதுவாக அனைவராலும் அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் மரவள்ளி

கிழங்கு உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலுள்ள சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் **1981**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சங்கம் தொடங்கப்படுவதற்கு முன்பு, சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்கள் குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்கள், அமைப்பு சார்ந்த சந்தை வாய்ப்பு இல்லாததினால், வியாபார இடைத்தரகர்களின் சுரண்டல் சூழ்நிலையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டனர். உற்பத்தியாளர்களின் இவ்வாறான துயரினை போக்கவும், அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வசதியை ஏற்படுத்தி கொடுப்பதற்காகவும் நிறுவப்பட்ட சேகோசர்வ் சங்கமானது, தனது உறுப்பினர்களுக்கு நிதி உதவி மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகின்றது.

இச்சங்கமானது தனது பரிசோதனைக் கூட வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சவ்வரிசிக் குழுமம் ஒன்று மத்திய அரசின் நிதியுதவி மூலமாக பகுப்பாய்வு கூடம் ஒன்றை பொது வசதி மையமாக ஏற்படுத்தியுள்ளது. மேலும், இச்சங்கங்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும்,

உலகளவில் சந்தைப்படுத்தவும் மற்றும் மின்னனு ஏலத்தை தொழில்நுட்ப வளர்ச்சியோடு வெளிப்படையாக நடத்தும் பொருட்டு, மின்னனு ஏல மையம் சேகோசர்வில் **12.12.2018**இல் தொடங்கப்பட்டுள்ளது. மின்னனு ஏல மையத்தை தொடங்கிய பிறகு சேகோசர்வின் விற்பனை விகிதமானது, ஒரு மாத காலத்தின் சராசரி விற்பனை அளவைவிட **149%** அதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 2.21 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

**1960**ஆம் ஆண்டுகளில், தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தங்களுடைய அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியுதவி பெறுவதில் கூட பெரும் சிரமங்களை சந்தித்து வந்தன. தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சந்தித்து வந்த மேற்கண்ட இடர்பாடுகளை நீக்கும் பொருட்டும், அச்சங்கங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டும், தாய்கோ வங்கி என்று பெருமையுடன் அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியானது, **1961**–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி

செய்வதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இவ்வங்கி தொடங்கப்பட்டது. ஆனால், நாளடைவில் இவ்வங்கியானது தமது சேவைகளை அனைத்துப் பிரிவினருக்கும் விரிவு செய்துள்ளது. தற்போது தாய்கோ வங்கியானது தனிநபர்களுக்கும் பல்வேறு கடன் வசதிகளை வழங்கி வருகின்றது. மேலும் இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், அவர்களுக்கென சேமிப்பு மற்றும் வியாபார கணக்கு வசதிகளை வழங்கியும் வருகின்றது. இவ்வங்கியானது மாநிலத்தில் அரசுத் துறைகளின் கடன் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் பங்கேற்று வருகின்றது.

இவ்வங்கியானது, **2015–16**இல் சாத்தூர் மற்றும் அம்பத்தூர் கிளைகளுக்கென சொந்த கட்டிடங்கள் கட்டி, அவற்றில் கிளைகளை நடத்தி வருகின்றது. மேலும் **2017–18**இல் **2** கிளைகளை தாம்பரம் மற்றும் கோயம்பத்தூரில் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், **47**வது புதிய கிளை மதுரையில் **12.12.2018**இல் தொடங்கப்பட்டது. ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி தாய்கோ வங்கியின் அனைத்துக் கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டு மைய வங்கியில் தீர்வு

(CBS) முறை வெற்றிகரமாக 47 கிளைகளிலும் செயல்படுத்தி வருகிறது. அனைத்து வங்கிக் கிளைகளிலும் வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தியில் தகவல் தரும் வசதியும் (SMS) மின்னனு பணப்பரிமாற்ற (RTGS/NEFT) சேவையும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரம் எழும்பூர், சேப்பாக்கம் மற்றும் நெய்வேலி ஆகிய மூன்று கிளைகளில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு பண அட்டை (ATM / Debit Card) வழங்கப்பட்டுள்ளன. வங்கியானது நடமாடும் மற்றும் இணையதள வங்கி சேவைகளை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.22 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

கயிறு தொழிற் கூட்டுறவு சங்கமானது கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குகிறது. இவ்வகையான தொழிற் கூட்டுறவு சங்கங்கள், நார் எடுத்தல், கயிறு பின்னுதல், பாய் மற்றும் பாய் சார்ந்த பொருட்களை உருவாக்குவதிலும், இரப்பரோடு கூடிய கயிறு படுக்கைகள் தயாரிப்பதிலும் முதன்மையாக

ஈடுபட்டுள்ளன. தற்பொழுது இத்துறையின்கீழ் 65 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 10,896–க்கும் மேற்பட்ட தொழிலாளர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. இதில் மகளிர்களுக்கு 80 விழுக்காடு அளவிற்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்காக மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு கயிறு விற்பனை இணையம் என்று அழைக்கப்படும் “டான்கோபெட்” – தலைமை கூட்டுறவு சங்கமாக, கயிறு விற்பனை இணையம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

கயிறு மற்றும் கயிறு சார்ந்த தொழிற் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் இதர சட்டப்பூர்வ பயன்களை பெறச்செய்து, அதன் மூலம் கயிறு பொருட்களின் உற்பத்தியினை ஊக்குவித்து, பெருமளவில் வேலைவாய்ப்பினை அளிக்கும் பொருட்டு, ‘சந்தை மேம்பாட்டு நிதி உதவி’ என்ற திட்டம் கயிறு வாரியம் மூலம் 2000–01 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தொழிற் கூட்டுறவு சங்கங்களின் கடந்த 3 ஆண்டு கால சராசரி விற்பனையில், 10 விழுக்காடு சந்தை

மேம்பாட்டு நிதியாக வழங்கப்பட்டு வருகின்றது. **31.03.2017** முடிய இந்நிதியானது, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து வழங்கப்பட்டு வந்தது. மேலும், மாநில அரசு கேட்டுக்கொண்டதின் பேரில் கயிறு வாரியம் **2017–18**ஆம் ஆண்டிற்கான MDA பங்கு ரூபாய் **116.49** இலட்சம் வழங்கியதை தொடர்ந்து, மாநில அரசும் தனது பங்கான ரூபாய் **116.49** இலட்சம் ஆக மொத்தம் ரூபாய் **232.98** இலட்சம் **64** கயிறு தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு MDA ஆக வழங்கப்பட்டது.

## 2.23 இதர தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தொடர்ச்சியான வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு, செங்கல் உற்பத்தி, பாலித்தீன் பை தயாரித்தல், ஆட்டோ சேவை, அச்சக உற்பத்தியாளர்கள் சேவை, ஒப்பந்தத் தொழிலாளர் சேவை, கைவினைத்தொழில், தையல் தொழில், பொறியியல் ஆகிய பிற பிரிவுகளிலும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம், நலிந்த பிரிவினைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இவ்வாறான தொழிற் கூட்டுறவு

சங்கங்களை உருவாக்குவதன் மூலம், திறன் மற்றும் பகுதி திறன் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் நிலையான வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு அல்லாமல், சட்ட ரீதியான பலன்களைப் பெறவும் வழிவகை செய்யப்படுகின்றது.

## 2.24 பாரம்பரிய தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டும் நிதியுதவி திட்டம் (SFURTI)

கயிறு தொழில் உட்பட பாரம்பரிய மிக்க தொழில்களின் உற்பத்தி திறனையும், அதன் சந்தை வாய்ப்பினையும் அதிகரித்து, இதர தொழில்களுடன் போட்டியிடும் அளவிற்கு செயல்பாட்டினை ஊக்குவித்து, அதன் மூலம் அவ்வகையான தொழில்களை வளர்ச்சி அடையச் செய்யும் பொருட்டு, மத்திய அரசானது பாரம்பரிய தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டும் நிதியுதவி திட்டத்தினை (SFURTI) உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், புதிய உபகரணங்களை புகுத்துதல், பொது வசதி மையங்கள் அமைத்தல், திறன் வளர்த்தல், வடிவமைத்தல், சிப்பமிடுதல், சந்தை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 12–வது

ஐந்தாண்டு திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 9 கயிறு குழுமங்கள் தருமபுரி, மதுரை, திருப்பூர் (காங்கேயம் மற்றும் பல்லடம்), கோயம்பத்தூர் , திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.37.79 கோடி மதிப்பீட்டில் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் ஒரு கயிறு குழுமம் ரூ.376.31 இலட்சத்தில் 10 வது கயிறு குழுமமாக கிருஷ்ணகிரி கயிறு குழுமம் என்ற பெயரில் கயிறு வாரியத்தால் 29.05.2018 அன்று ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள கயிறு குழுமங்களில் 2 கயிறு குழுமங்கள் முறையே காங்கேயம் மற்றும் பல்லடம் 18.05.2018 அன்று தொடங்கப்பட்டது. பொள்ளாச்சி கயிறு குழுமம், மதுரை கயிறு குழுமம் மற்றும் கிருஷ்ணகிரி கயிறு குழுமங்களை தவிர அனைத்து கயிறு குழுமங்களும் திறக்கப்பட தயார்நிலையில் உள்ளன. பொள்ளாச்சி மற்றும் மதுரை கயிறு குழுமத்தில் இயந்திரம் நிறுவுதல் பணி நடைபெற்று வருகிறது. ஏனைய 5 கயிறு குழுமங்களில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு கயிறு பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 3 கயிறு குழுமங்கள் மாநில அரசு

நிதியில் ‘‘கயிறு குழுமங்களை மேம்படுத்துதல்’’ திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ரூ.22.00 கோடி செலவில் அமைத்திட ஒப்புதல் வழங்கியுள்ளதோடு, அக்குழுமங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கியுள்ளது. இட்காட் நிறுவனத்திடமிருந்து 3 குழுமங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டது. இத்திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பட்டு 4.2.2019 அன்று திட்ட ஒப்புதல் குழு திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியது. மேற்குறிப்பிட்ட 3 கயிறு குழுமங்களுக்கு அங்கீகாரமும் மற்றும் முதல் தவணையை அரசு பங்காக விரைவில் நிதி வழங்கப்பட உள்ளது.

## 2.25 அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தேவைப்படும் மனித ஆற்றலை உருவாக்கிடும் வகையிலும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் வகையிலும் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயிற்சி பெற வர்த்தகத்தின் அடிப்படையில் பயனாளிகள் NSDC / NSDA / Sector Skill Council / MESஆகிய

அமைப்புகளின் விதிமுறையில் ஏதேனும் ஒன்றில் தகுதியினை பூர்த்தி செய்திருக்க வேண்டும், வர்த்தக அமைப்புக்கான கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் அதிகபட்சமாக 6 மாத காலத்திற்கு அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் ரூ.5,000/– வீதம் பயனாளிகளுக்கு வழங்கும். அதில் மாதம் ரூ.2,000/– வீதம் நபர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.12,000/– வரை அரசால் மானியமாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

2018–19ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் மொத்த இலக்கு 25,000 ஆகும். 25,246 பயனாளிகளுக்கு இவ்வாண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 3. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)

### 3.1 சிட்கோ உருவாக்கம்

தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல் மற்றும் அவற்றின் வளர்ச்சி ஆகியவைகளைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), 1970ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிப் பணியில் சிட்கோ முக்கியப் பங்காற்றி வருகின்றது.

புதிய தொழிற்பேட்டைகளை அமைத்தல், தனியார் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு உதவுதல், மூலப்பொருட்கள் வழங்குதல், குழுமம் வாயிலாக பொது வசதி மையம் அமைத்திட உதவுதல், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்த உதவுதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிர்வாக வழிகாட்டுதல் ஆகியன சிட்கோவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

சிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.25.14 கோடியாகும். 2018–19ஆம் நிதியாண்டில் ரூ.1.73 கோடி இலாபம் ஈட்டப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.2 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு

15 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் 5 சென்ட் முதல் 15 சென்ட் பரப்பளவில் குறு நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டைகளை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சிட்கோ அமைக்கின்றது.

புதிய தொழிற்பேட்டைகள் அனைத்தும் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி, தெருவிளக்குகள், பசுமை பகுதி, கால்வாய்கள், பூங்கா மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதியுடன் உருவாக்கப்படுகின்றன. மேலும் தொழிற்பேட்டைகளில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு வரைபட ஒப்புதல், நகர்புற ஊரமைப்பு இயக்ககம் (DTCP) மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (CMDA) மூலம் பெறப்படுகிறது.

8,204 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 4,714 தொழிற்கூடங்களை கொண்டுள்ள 119 தொழிற்பேட்டைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக 31.3.2019 வரை மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டைகள் அனைத்தும் சிட்கோவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த தொழிற்பேட்டைகளின் பட்டியல் பின் **இணைப்பு 3.1** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.1 சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள அரசு தொழிற்பேட்டைகள்

தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்காக தொழிற்பேட்டைகளை உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. 1958–லிருந்து 1986 வரை 4,511.40 ஏக்கர் நிலப்பரப்பில் 41 தொழிற்பேட்டைகள், தொழில் வணிக ஆணையரகத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் முதல் தொழிற்பேட்டை, 1958ஆம் ஆண்டில், 404.08 ஏக்கர் நிலப்பரப்பில் கிண்டியில் நிறுவப்பட்டுள்ளது. 1963ஆம் ஆண்டு 1,167 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை

அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. அரசு தொழிற்பேட்டைகள் அனைத்தையும் அரசு, சிட்கோ நிறுவனத்திற்கு மாற்றம் செய்துள்ளது. அனைத்து அரசு தொழிற்பேட்டைகளையும் சிட்கோ நிர்வகித்து வருகின்றது. அரசு தொழிற்பேட்டைகளின் பட்டியல் **இணைப்பு–3.2** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.2 சிட்கோ தொழிற்பேட்டைகள்

தொழிற்பேட்டைகளை உருவாக்குவது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய செயல்பாடாகும். தொழிற்பேட்டைகளுக்கான அரசு நிலங்கள், அரசிடமிருந்து நில உரிமை மாற்றம் மூலமாகவும் மற்றும் தனியார் நிலங்கள் நில உரிமையாளரிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டும் அவற்றில் தொழில் மனைகள் அமைக்கப்படுகின்றன.

**1970**ஆம் ஆண்டு சிட்கோ நிறுவப்பட்டது முதல் **2010**ஆம் ஆண்டு வரையில் சுமார் **2,332.67** ஏக்கர் பரப்பளவில் இதுவரை **54** தொழிற்பேட்டைகளை சிட்கோ சுயமாக உருவாக்கியுள்ளது.

**2011**ஆம் ஆண்டு முதல் **2019**ஆம் ஆண்டு வரை **35** புதிய தொழிற்பேட்டைகள் சிட்கோவினால் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டன. அவற்றில் **22** தொழிற்பேட்டைகள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ளன. இதன் பட்டியல் **இணைப்பு–3.3** இல் கொடுக்கப்பட்டுள்ளது. சிட்கோ நிறுவனம் மீதமுள்ள தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. 2011 முதல் 2019 வரை உருவாக்கப்பட்ட மேற்சொல்லப்பட்ட **22** தொழிற்பேட்டைகள் தவிர, (i) திருமுடிவாக்கம்(குறு) மற்றும் (ii) திருமுடிவாக்கம் (பகுதி–2) ஆகிய **2** தொழிற்பேட்டைகள் சிட்கோவினால் மேலும் உருவாக்கப்பட்டுள்ளன.

### 3.2.2.1 மகளிர் தொழிற் பூங்காக்கள்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட **78** தொழிற்பேட்டைகளில் **5** தொழிற்பேட்டைகள் மகளிருக்கான தொழிற் பூங்காக்களாகும். இத்தொழிற்பூங்காக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், **2001**ஆம் ஆண்டு அறிவிப்பின்படி மகளிர் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த

5 மகளிருக்கான தொழிற் பூங்காக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| வ. எண் | மகளிர் தொழிற்பூங்காவின் பெயர் | தொடங்கப் பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயல், திருவள்ளூர் மாவட்டம் | 2001 | 246.07 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2002 | 11.48 |
| 3 | வாழவந்தான்கோட்டை திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 2003 | 51.70 |
| 4 | கருப்பூர், சேலம் மாவட்டம் | 2004 | 51.24 |
| 5 | கப்பலூர், மதுரை மாவட்டம் | 2008 | 18.87 |
| | **மொத்தம்** | | **379.36** |

### 3.2.3 குடியிருப்பு பகுதிகளில் இயங்கிவரும் தொழிற் கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தல்

நகர்புற குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்களால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு மாசுக்களால் உபாதைகள் ஏற்படுகின்றன.

நகர்புறத்தில் உள்ள இட நெருக்கடி காரணமாக மேலும் தொழிற்கூடங்களை விரிவுபடுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

இதனை உணர்ந்து, 2013–14 ஆம் ஆண்டில் அரசின் சிறப்பு சலுகை அறிவிப்பின்படி, நகர் பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தொழிற்கூடங்களை மாற்றி அமைத்து நகருக்கு வெளியே தொழிற்குழுமம் மற்றும் தொழிற்பேட்டைகளை உருவாக்க தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் முன்வரும் பட்சத்தில், மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி கூடங்கள்/ கருத்தரங்க கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் பொது வசதி மையங்களை ஏற்படுத்த அரசு மானியம் 75 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.15 கோடி வரை வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.3,184.75 இலட்சம் மொத்த திட்ட மதிப்பீட்டில் 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் நாமக்கல் கனரக வாகன கட்டமைப்பு குழும திட்டம், ரூ.1,367.75 இலட்ச திட்டமதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள மீதி 2 குழும திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | நிலம் ஏக்கரில் | ஒதுக்கீடு செய்யப் பட்ட திட்ட தொகை | ஒப்புதலளிக்கப் பட்ட மானியத் தொகை | தவணை யாக பெறப்பட்ட மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேயிலை குழுமம், மேட்டுபாளையம் | 13.45 | 600.00 | 450.00 | 225.00 |
| 2 | தென் மாவட்ட ஜவுளி செயல்முறைப் படுத்தும் குழுமம், விருதுநகர் | 100.46 | 1217.00 | 912.75 | 456.38 |
| | **மொத்தம்** | **113.91** | **1817.00** | **1362.75** | **681.38** |

## 3.2.4 தனியார் தொழிற்பேட்டை அமைத்தல்

தொழிற்பேட்டை அமைக்க அரசு நிலங்கள் கிடைப்பது அரிதாக உள்ளதாலும், தனியார் நிலங்களை கையகப்படுத்துதல் நடைமுறையில் மிக சிக்கலாக உள்ளதாலும், புதிய தொழில் முனைவோர்கள் மற்றும் இயங்கி வரும் தொழிற் சாலைகளின் விரிவாக்கம் ஆகியவற்றிற்கு கூடுதல் தொழில்மனைகளின் தேவை அதிகரித்து வருவதாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **2013–14**ஆம் ஆண்டில், விதி எண்.**110**ன் கீழ் சிறப்பு தொகுப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி தனியார்

தொழில்முனைவோர் அமைப்புகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கென புதிய தொழிற்குழுமம் மற்றும் தொழிற்பேட்டைகளை நகருக்கு வெளியே அமைக்க முன்வரும் பட்சத்தில் அரசு மானியம் 50 விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக ரூ. 10 கோடி வரை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.3,796.66 இலட்சம் மொத்த திட்ட மதிப்பீட்டில் 2 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | நிலம் ஏக்கரில் | ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்ட தொகை | ஒப்புதலளிக்கப் பட்ட மானியத் தொகை | முதல் தவணையாக கொடுக்கப் பட்டுள்ள மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை பொறியியல் குழுமம் | 54.00 | 1364.66 | 682.33 | 341.17 |
| 2 | கொடிசியா தொழிற்பூங்கா (CODISSIA), கோயம்புத்தூர் | 250.00 | 2432.00 | 1000.00 | 500.00 |
| மொத்தம் | | 304.00 | 3796.66 | 1682.33 | 841.17 |

### 3.2.5 கூட்டு முயற்சித் திட்டத்தின் கீழ் தொழிற்பேட்டைகள்

தனியார் தொழிற்பேட்டைகளை கூட்டு முயற்சி முறையின் கீழ் அமைப்பதற்கான திட்டத்தினை அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், விருப்பமுள்ள தனியார் தொழில் நிறுவனங்கள் சிட்கோவுடன் கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் இணையலாம். இதில் சிட்கோவின் குறைந்தபட்ச மூலதனம் 11 சதவீதமாக இருக்கும்.

### 3.2.6 மத்திய அரசின் குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டத்தின் (MSE-CDP) கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மத்திய அரசு குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP) கீழ் (i) புதிய தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் (ii) நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் அதிக பட்சமாக ரூ.10 கோடி வரையிலான திட்ட மதிப்பீட்டில் 60 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.6 கோடி வரை புதிய தொழிற்பேட்டை

உருவாக்கும் திட்டத்திற்கும், இயங்கிவரும் தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சிட்கோ, இத்திட்டத்தின் மூலம் மானியம் பெற்று, புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதும் மற்றும் இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியும் வருகிறது.

### 3.2.6.1 குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தில் (MSE–CDP) கீழ் புதிய தொழிற்பேட்டைகள் – உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற்று சிட்கோ **16** புதிய தொழிற்பேட்டைகளை இதுவரை ஏற்படுத்தியுள்ளது. மேலும், **2** திட்டங்கள் முறையே (அ) பிடாநேரியில் (தூத்துக்குடி மாவட்டம்) ரூ.**805.00** இலட்ச திட்ட மதிப்பீட்டிலும் (ஆ) பெரிய நெசலூரில் (கடலூர் மாவட்டம்) ரூ.**1,250.00** இலட்ச திட்ட மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2018–2019** ம் நிதி ஆண்டில் மத்திய அரசு கீழ்காணும் இரண்டு திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது.

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | பங்கு | |
|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் மானியம் | சிட்கோ பங்களிப்பு |
| 1. | சிட்கோ தொழிற்பேட்டை, ஊத்தங்கரை, தருமபுரி மாவட்டம் | 496.00 | 265.00 | 231.00 |
| 2. | சிட்கோ தொழிற்பேட்டை, மரிக்குண்டு, தேனி மாவட்டம் | 850.00 | 369.60 | 480.40 |
| | **மொத்தம்** | **1346.00** | **634.60** | **711.40** |

நடப்பு நிதி ஆண்டில் கீழ்காணும் இரண்டு திட்டங்களுக்கான ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | பங்கு | |
|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் மானியம் | சிட்கோ பங்களிப்பு |
| 1. | சிட்கோ தொழிற்பேட்டை, குருக்கள்பட்டி, திருநெல்வேலி மாவட்டம். | 650.00 | 343.20 | 306.80 |
| 2. | சிட்கோ தொழிற்பேட்டை, பெருந்துறை, ஈரோடு மாவட்டம். | 350.00 | 177.00 | 173.00 |
| | **மொத்தம்** | **1,000.00** | **520.20** | **479.80** |

### 3.2.6.2 குறு, சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தில் (MSE–CDP) கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் மானியம் பெற்று சிட்கோ நிறுவனம், ஏற்கனவே உருவாக்கப்பட்ட **13** தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. மேலும், திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொழிற்பேட்டையில் ரூ.**378.50** இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் கீழ்காணும் **6** திட்டங்களுக்கு மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | பங்கு | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளியின் பங்களிப்பு |
| 1 | சிட்கோ தொழிற்பேட்டை கே. புதூர், மதுரை மாவட்டம் | 520.00 | 219.60 | 248.40 | 52.00 |
| 2 | சிட்கோ தொழிற்பேட்டை, ஓசூர் (புதியது) கிருஷ்ணகிரி மாவட்டம் | 400.00 | 139.20 | 220.80 | 40.00 |
| 3 | சிட்கோ தொழிற்பேட்டை, நாஞ்சிக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் | 285.00 | 105.00 | 151.50 | 28.50 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | பங்கு | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளியின் பங்களிப்பு |
| 4 | சிட்கோ தொழிற்பேட்டை ராணிப்பேட்டை, வேலூார் மாவட்டம் | 955.00 | 342.60 | 516.90 | 95.50 |
| 5 | சிட்கோ தொழிற்பேட்டை நஞ்சை ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம் | 230.00 | 94.20 | 112.80 | 23.00 |
| 6 | திண்டுக்கல் தொழிற்பேட்டை திண்டுக்கல் மாவட்டம் | 405.00 | 192.00 | 172.50 | 40.50 |
| | **மொத்தம்** | **2795.00** | **1092.60** | **1422.90** | **279.50** |

## 3.2.7 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு உதவி திட்டங்கள் (JICA)

ஒரே வகைப்பொருள் உற்பத்தி சார்ந்த ஒருங்கிணைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரக் குழுமங்கள் காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஜவுளி உற்பத்திக் குழுமம், தருமபுரி மாவட்டத்தில் உணவு தயாரிப்புக் குழுமம் மற்றும் இராமநாதபுர மாவட்டத்தில், கடல்சார் உணவுக் குழுமம் என 4 இடங்களில் தொடங்குவதற்கான சிறப்பு திட்டம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் உதவியுடன் தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்பு திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என **2017–18**ஆம் ஆண்டில்

அறிவிக்கப்பட்டது. இச்சிறப்பு திட்டங்கள் ரூ.88 கோடியில் 4 இடங்களில் உருவாக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூ. கோடியில்)

| வ. எண் | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு (JICA) உதவி திட்டத்தின் பெயர் | ஜப்பான் நிதி | மாநில அரசு நிதி | சிட்கோ நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த தொழிற் நுட்ப ஜவுளி தொழிற்பூங்கா, தண்டரை காஞ்சிபுரம் மாவட்டம் | 13.00 | 2.00 | 10.00 | 25.00 |
| 2. | ஒருங்கிணைந்த ஜவுளி /ஆடை தொழிற்பூங்கா, புஞ்சைக்காலகுறிச்சி கரூர் மாவட்டம் | 14.00 | 2.00 | 5.00 | 21.00 |
| 3. | ஒருங்கிணைந்த உணவு தொழிற் பூங்கா, ஈச்சம்பாடி, தருமபுரி மாவட்டம் | 15.00 | 2.00 | 3.00 | 20.00 |
| 4. | ஒருங்கிணைந்த கடல்சார் உணவு தொழிற் பூங்கா, சக்கரக்கோட்டை இராமநாதபுரம் மாவட்டம் | 16.00 | 2.00 | 4.00 | 22.00 |
| **மொத்தம்** | | | | | **88.00** |

மேற்கூறிய நான்கு இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு

இத்தொழிற் பூங்காக்களில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

## 3.3 ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்ய இருக்கும் தொழில் மனைகள் மற்றும் தொழிற் கூடங்களின் விவரங்கள் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டும், சிட்கோவின் வலை தளத்தில் வெளியிடப்பட்டும், ஒதுக்கீடுகளில் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட்டும் வருகின்றது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத் துறை ஆணையரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வங்கிகள் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவால் விண்ணப்பதாரர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். காலியாக உள்ள தொழில் மனைகள்/தொழிற்கூடங்களை விட தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அதிகமாக இருந்தால் குலுக்கல் முறையில் தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

சிட்கோ நிறுவனம், தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப **5** சென்ட் முதல் **100** சென்ட் (**1.00** ஏக்கர்) மற்றும் அதற்கு மேலான அளவுள்ள தொழில் மனைகளை உருவாக்கி, தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப தொழில் மனைகளை தொழிற்பேட்டைகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்க்கு ஒதுக்கீடு செய்கின்றது. **2018–19**ஆம் நிதியாண்டில் **248** தொழில் மனைகள் மற்றும் **10** தொழிற்கூடங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### 3.3.1 சிட்கோவின் புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனம் அதன் தொழிற்பேட்டைகளில், முழு கிரைய விலை விற்பனை மூலம் தொழில் மனைகளை **2013**ஆம் ஆண்டு வரை ஒதுக்கீடு செய்து வந்தது. மனைகளை வாங்குவதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நிதி சுமையை குறைக்கும் பொருட்டு **2013–14**ஆம் நிதியாண்டில் புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை **18.11.2013** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறை, அரசாணை (நிலை) எண்.**66**–ல் வெளியிடப்பட்டது. இக்கொள்கையின்படி, **2013–14**ஆம்

நிதியாண்டிலிருந்து அமைக்கப்படும், சிட்கோ தொழிற்பேட்டைகளில் மனைகள் 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மட்டும் ஒதுக்கீடு செய்யவும், 30 ஆண்டு கால முடிவில் முழு கிரய விலையில் வாங்க விருப்புரிமையும் அளிக்கப்பட்டது.

எனினும், பல்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்களின் கோரிக்கையினை ஏற்று புதிய ஒதுக்கீடு கொள்கை மேலும் மாற்றம் செய்யப்பட்டு அரசு ஆணை எண்.40 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள் 15.12.2016இல் வெளியிடப்பட்டது. இதன்படி 2013–14ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்படும் சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில்மனைகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் விருப்பத்திற்கேற்ப “நீண்ட கால குத்தகை அடிப்படை” அல்லது “முழு கிரைய விலை விற்பனை” முறையில் ஒதுக்கீடு பெற வழிவகை செய்யப்பட்டது.

இதன்படி நீண்ட கால குத்தகை அடிப்படையில், தொழில்முனைவோர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனையின் விலையில் 60 விழுக்காடு முதலில் செலுத்த வேண்டும்.

மீதமுள்ள **40** விழுக்காடு மனையின் விலையை, **30** ஆண்டு காலத்திற்கு வருட தவணைமுறையில் செலுத்த வேண்டும். **30** ஆண்டு கால முடிவில் விற்பனை பத்திரம் எந்தவொரு கூடுதல் விலையுமில்லாமல் வழங்கப்படும்.

### 3.3.2 பல்வேறு பிரிவினருக்கு தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

**31.1.2009** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறையின் அரசாணை (நிலை) எண் 7–ன்படி புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பேட்டையில் விற்பனைக்கு உள்ள மொத்த நிலப் பகுதியில் **30** விழுக்காடு குறுந்தொழில்களுக்காக ஒதுக்கப்படுகின்றது.

கீழ்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- மகளிர் தொழில் முனைவோர் – 30%
- முன்னாள் இராணுவத்தினர் – 10%
- பட்டியல் இனத்தினர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் – 20%

மேற்படி இனங்களில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில், அவர்களுக்காக முன்னுரிமையில் வைக்கப்பட்ட தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**29.10.2012** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் **49** இன்படி, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்தால், சிட்கோ தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய முன்னுரிமையில் பரிசீலிக்கப்படும்.

## 3.4 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் [MSE-CDP] கீழ் பொது வசதி மையம் (CFC) அமைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தியினை பெருக்குவதற்கும், போட்டித்திறனை அதிகரிக்கவும் அவற்றின் திறனை கட்டமைக்கவும், குழும

வளர்ச்சி அணுகு முறையினை முக்கிய உத்தியாக மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழ்கண்டவாறு:

i. தொழில்நுட்ப மேம்பாடு திறன், தரம், சந்தைப்படுத்துதல் மற்றும் மூலதன தேவைகளுக்கான அணுகுமுறை மற்றும் பிற பொதுவான பிரச்சினைகளை ஆராய்வது மூலம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் நிலையான வளர்ச்சிக்கு உதவுதல்.

ii. சுய உதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி குறு மற்றும் சிறு நிறுவனங்களின் திறனை பொது செயல்பாடுகளால் கட்டமைத்தல்.

iii. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்காக புதிய தொழில் வளாகம் / குழுமங்களை ஏற்படுத்தல், நடைமுறையில் உள்ள தொழில் வளாக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

iv. பொது வசதி மையம் ஏற்படுத்துதல் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி முறையை பூர்த்தி செய்தல்) ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பதற்கான நிதி ஆதாரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மத்திய அரசு மானியம் | 70% (அதிக பட்ச திட்டத் தொகை ரூ.15 கோடி) |
| மாநில அரசு மானியம் | 10% (அதிக பட்ச மானியம் ரூ.1 கோடி) |
| சிறப்பு நோக்க அமைப்பு பங்களிப்பு / வங்கிக் கடன் | 20% |

பொது வசதி மையம் அமைப்பதற்கான 44 திட்டங்கள் கண்டறியப்பட்டு, அதில் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.163.26 கோடி கொண்ட 30 திட்டங்களுக்கு மத்திய அரசின் மானியமாக ரூ.111.51 கோடி அளவிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசு ரூ.12.99 கோடி மானியம் அளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட 30 திட்டங்களில், 22 திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுவிட்டன. மீதமுள்ள 8 திட்டங்கள், பல்வேறு நிலைகளில் நிறைவேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக சுமார் 25,500 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர். இந்த 30 திட்டங்களின் பட்டியல் பின் **இணைப்பு–3.4** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் 9 திட்டங்களுக்கும் இறுதி ஒப்புதல் ஒரு திட்டத்திற்கும் ஆக 10 திட்டங்களுக்கு ரூ.145.71 கோடி, திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த 10 திட்டங்களின் பட்டியல் **இணைப்பு–3.5** இல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு ரூ.59.48 கோடி திட்டமதிப்பிலான 4 புதிய திட்டங்களை மத்திய அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரைத்துள்ளது. இந்த 4 திட்டங்களின் பட்டியல் பின் இணைப்பு-**3.6**இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.4.1 குறுந்தொழில் குழுமம்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 13.2.2014 அன்று நிதிநிலை அறிக்கையின்போது, அரசு குறுந்தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, பொது உற்பத்தி கட்டமைப்பு உருவாக்குதல் மற்றும் மூலப்பொருள் வங்கி மற்றும் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல், என்ற புதிய திட்டத்தினை அறிவித்தார். இத்திட்டத்தின் கீழ் அரசு 6 குறுந்தொழில் குழுமங்களுக்கு ரூ.1,320.98 இலட்சம் மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றில் 5 திட்டங்களுக்கு முதல் தவணையாக ரூ.535.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குறுந்தொழில் குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒப்புதலளிக் கப்பட்ட மானியத் தொகை | முதல் தவணையாக வழங்கப்பட்ட மானியம் |
|---|---|---|---|---|
| 1 | பொது வசதி மையம் அமைத்தல், ஈரோடு தொழிற்பேட்டை, ஈரோடு மாவட்டம் | 652.00 | 233.00 | 116.50 |
| 2 | பொது வசதி மையம் அமைத்தல், காக்களூர் தொழிற்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம் | 464.00 | 233.00 | 116.50 |
| 3 | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி–I கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் | 260.00 | 180.00 | 90.00 |
| 4 | பொது வசதி மையம் அமைத்தல், திருமுடிவாக்கம் அடுக்குமாடி தொழிற்வளாகம் பகுதி– II, காஞ்சிபுரம் மாவட்டம் | 501.00 | 250.00 | 125.00 |
| 5 | பொது வசதி மையம் அமைத்தல், வெள்ளி கொலுசு குழுமம், சேலம், சேலம் மாவட்டம் | 249.96 | 174.98 | 87.49 |
| 6 | பொது வசதி மையம் அமைத்தல், அட்டை பெட்டி குழுமம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம் | 389.80 | 250.00 | 0.00 |
| **மொத்தம்** | | **2,516.76** | **1,320.98** | **535.49** |

## 3.5 ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தலில் உதவி

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சர்வதேச சந்தையில் கலந்து கொள்ளவும், புதிய தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ளவும், உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளின் திறனை உயர்த்தவும், தமிழக அரசு **2017–18**ஆம் ஆண்டு ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்துதலில் உதவிடும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், சர்வதேச கண்காட்சி / வர்த்தகம் / வாங்குபவர்–விற்பவர் சந்திப்பு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்குபெறுவதற்கும் உதவி செய்யப்படுகிறது. மாநிலத்தில் முதன்முதலாக தொடங்கப்பட்ட இத்திட்டம் குறுகிய காலத்தில், மாநில அளவில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் ஏற்படுத்தும் முக்கிய திட்டமாக உருவெடுத்துள்ளது.

**2017–18**ஆம் ஆண்டில் நடைப்பெற்ற **5** சர்வதேச தொழில் / வர்த்தக கண்காட்சிகளிலும், **2018–19**ஆம் ஆண்டில் நடைபெற்ற **13** கண்காட்சி நிகழ்வுகளிலும், வெற்றிகரமாக பங்கேற்று, குறு, சிறு நிறுவனங்களுக்கு சர்வதேச வர்த்தகம் பெறுவதற்கு பயனுள்ளதாக அமைந்தது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் அரசின் பிரதிநிதிகள் பங்கேற்ற **13** சர்வதேச நிகழ்வுகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | நிகழ்வின் பெயர் |
|---|---|
| 1 | 11 – 14 ஏப்ரல் 2018இல், தமிழ்நாட்டில் நடந்த 10வது DEFEXPO இந்திய கண்காட்சி. |
| 2 | 22 - 24 ஏப்ரல் 2018இல், புதுடெல்லியில் நடந்த சர்வதேச சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் மாநாடு. |
| 3 | 23–27 ஏப்ரல் 2018இல், ஜெர்மனியில் நடந்த Hannover Messe உலகளாவிய கண்காட்சி. |
| 4 | 9–11 மே 2018இல், சிட்னியில் (ஆஸ்திரேலியா) நடந்த தேசிய உற்பத்தியாளர் வாரம் 2018. |
| 5 | 14 – 15 செப்டம்பர் 2018இல், மியாமி, அமெரிக்காவில் நடந்த ஆசிய அமெரிக்க வர்த்தக நிகழ்ச்சி. |
| 6 | 14 – 16 செப்டம்பர் 2018இல், கொல்கத்தாவில் நடந்த தேசிய கருத்தரங்கு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான தயாரிப்புகளைப் பற்றிய கண்காட்சி |
| 7 | 14–25 டிசம்பர் 2018இல், கொல்கத்தாவில் நடந்த இந்தியாவின் பெரிய அளவிலான சர்வதேச வர்த்தக கண்காட்சி. |
| 8 | 12–15 பிப்ரவரி 2019இல், மாஸ்கோ, ரஷ்யாவில் நடந்த 23வது aquatherm உலகளாவிய நிகழ்ச்சி. |
| 9 | 14–16 மார்ச், சென்னையில் நடந்த சர்வதேச உலக பொறியியல் தொழில் கண்காட்சி. |
| 10 | 31 ஜனவரி முதல் – 2 பிப்ரவரி 2019 வரை, புதுடெல்லியில் நடந்த இந்திய சர்வதேச வணிக சந்திப்பு. |
| 11 | 6–8 மார்ச் 2019, மும்பையில் நடந்த 8வது உலக பொருளாதார உச்சிமாநாடு, |
| 12 | 26–28 மார்ச் 2019, மும்பை யில் நடந்த 4வது CAPINDIA -2019 RBSM. |
| 13 | 27–29 மார்ச் 2019 புதுடெல்லியில் நடந்த முதல் உலக பொருளாதார மண்டல கண்காட்சி (GEX). |

குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புதிய வர்த்தக வாய்ப்பை பெறுவதற்கும், புதிய முதலீடுகளை மாநிலத்தில் கொண்டு வருவதற்கும், மேலும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் பெறுவதை ஊக்குவிக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் மூலமாக உதவி செய்ய முடிந்த போதிலும், சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மற்றும் சந்திப்பு மூலம் 187 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நேரடியாக பயன் பெற்றதன் மூலமாக, ரூ.225.00 கோடி மதிப்பிற்கான கூடுதல் ஏற்றுமதிக்கு வாய்ப்பு உருவானது.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கான உகந்த சூழலை தெரியப்படுத்துவதின் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் இது வகை செய்கிறது.

மேலும், இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் துறை சார்ந்த தொழில்

நிறுவனங்களை பன்னாட்டுமயமாக்கவும், புதிய முதலீட்டை ஈர்க்கவும், பன்னாட்டு தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளுடன் இணைந்து செயல்படவும் "குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" ஒன்றினை உருவாக்கி, தமிழக அரசு **24.01.2019** நாளிட்ட, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் (G) நிறுவனங்கள் துறையின் அரசாணை எண்.**8**இல் ஆணையிட்டுள்ளது. இவ்வமைப்பு பதிவு செய்யப்பட்டு, இந்திய அளவில் முன்னோடி அமைப்பாக விரைவில் செயல்படவுள்ளது.

**3.6 மூலப்பொருட்கள் விநியோகம்**

மூலப்பொருட்களாகிய ஃபாரபின் மெழுகு, மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் (நேரடி மற்றும் முகமை) ஆகியவை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும், விநியோகம் செய்யப்படுகிறது.

2018–19ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனையின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | மூலப் பொருள் | இலக்கு 2018–19 | | சாதனை 2018– 2019 | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ.டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | பாரபின் மெழுகு | 2300 | 1734.520 | 1934.95 | 1522.272 |
| 2 | காகிதம் (நேரடி விற்பனை) | 137 | 103.890 | 125.810 | 86.745 |
| 3 | காகிதம் (முகமை விற்பனை) | 480 | 310.000 | 225.708 | 161.912 |
| மொத்தம் | | 2917 | 2148.410 | 2286.468 | 1770.929 |

## 3.7 விற்பனை உதவித் திட்டம்

விற்பனை உதவித் திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு, சிட்கோ உதவி செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிட்கோவிடம் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை அணுகி, பணி ஆணைகளை பெற்று

உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட பணி ஆணைகள் (work orders), குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தரமான பொருட்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் உறுதி செய்கிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் **3** விழுக்காடு ஆலோசனைக் கட்டணம் பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கான தொகை வழங்கப்படுகிறது.

சிட்கோ நிறுவனம் **2018–19**ஆம் ஆண்டில் ரூ.**86.111** லட்சங்கள் மதிப்பிலான கொள்முதல் ஆணைகளை, விற்பனை உதவி திட்டத்தின் கீழ் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் வாயிலாக நிறைவேற்றி இருக்கிறது.

## 3.8 மின் ஆளுமை

சிட்கோ தனது வணிக செயல் முறைகளை ஆரம்பம் முதல் முடிவு வரை முழுமையாகவும் திறமையாகவும் வெளிப்படையாகவும் தானியங்கியாக செயல்படவும், எளிதான வணிக செயல்பாட்டை மேம்படுத்தவும், தனது சேவைகளை

வலைதளம் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் இதர பயனீட்டாளர்களுக்கும் வழங்குகிறது. இந்த சேவைகளை https://www.tansidco.in வலைதளம் மூலம் பெறலாம். இந்த மின்ஆளுமை திட்டமானது புவியியல் தகவல் முறை மூலம் சிட்கோவின் அனைத்து பணிகளையும், தொழில் மனை / தொழிற்கூடம் ஒதுக்கீடு மற்றும் இதுசம்பந்தப்பட்ட அனைத்து பணிகளையும், மூலப்பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகம், ஒப்பந்தச் செயல்பாடுகள், மனிதவள மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் பிற பணிகளையும், செயல்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்டு உள்ளது.

# 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்(TANSI)

## 4.1 அறிமுகம் மற்றும் உருவாக்கம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் **(TANSI) 1965**ஆம் வருடம் தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த **64** சிறுதொழில் கூடங்களை ஏற்றுக்கொண்டு, நிறுமச்சட்டம் **1956**இன் படி பதிவு செய்து, **1.12.1965** முதல் உற்பத்தியை தொடங்கியது.

### அலகுகளின் எண்ணிக்கை

சந்தையின் தேவைக்கேற்ப டான்சி தன்னுடைய நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி அலகுகளை மறுசீரமைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது டான்சிக்கு **24** தொழிற்கூடங்களும் நாமக்கல் மற்றும் திருச்சியில் **2** காட்சியகங்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| பொறியியல் தொழிற்கூடங்கள் | – | 10 |
| மர அறைகலன் தொழிற்கூடங்கள் | – | 11 |
| சிறப்பு வகை தொழிற்கூடங்கள் | – | 3 |
| **மொத்தம்** | **–** | **24** |

### 4.2 நடவடிக்கைகள்

மின் வாரியத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள் தயாரித்தல், மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், கட்டுமான வேலைகள், கைப்பம்புகள் உற்பத்தி செய்தல், சாராவியைப் பயன்படுத்திக் தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற பொருட்கள், வர்ணம், குழந்தைகள் எடை போடும் கருவி, மரத்திலான கட்டுமானத்தில் அறைகள் பிரித்தல் போன்ற உள்வேலைப்பாடுகள் முதலியவற்றை டான்சி நிறுவனம் செய்து வருகிறது. மேற்கூறிய பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனி முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும், ‘சர்வசிக்சா அபியான்’ திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட அறைகலன்களையும், அரசு மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான ஸ்டீல் கட்டில்கள், மின் பகிர்மான கழகத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள், மருத்துவத் துறைக்குத் தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட் மற்றும் பஞ்சாயத்து மற்றும் மாவட்ட ஆட்சியரகத்துக்கு குடிநீர் வழங்க தேவையான கைப்பம்புகளையும் அதன் உதிரி பாகங்களையும் டான்சி நிறுவனம் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக திறன் ஆகியவற்றை பயன்படுத்தி டான்சி சிறந்த உற்பத்தி திறனை நோக்கி முன்னேறி வருகிறது. கீழ்க்காணும் டான்சியின் அலகுகள் ஐ.எஸ்.ஓ–**9001:2008** தரச்சான்றிதழை பெற்றுள்ளன:

- டான்சி கைப்பம்பு தொழிற்கூடம், அம்பத்தூர்
- டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்கூடம், திருச்சி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், பழனி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், இராஜபாளையம்
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், வேலூர்
- தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம், அம்பத்தூர்

## 4.3 வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள்

| தொழிற்கூட வகைகள் | உற்பத்தி பொருட்கள் |
|---|---|
| (அ) கட்டுமானம் மற்றும் பொறியியல் | தொழிற்சாலை கட்டிடங்கள், பாலங்கள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் பலவகை மென் கட்டுமானங்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு தேவையான மின் கடத்தி பொருட்கள், நிலைப்பெட்டிகள், கிரில்கள், உலோகத் தகடுகளாலான பொருட்கள். |
| (ஆ) அறை கலன்கள் | மர அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை அலங்கார வேலைப்பாடுகள், அறைகலன்கள், வீடு, அலுவலகம், கல்லூரி விடுதி மற்றும் மருத்துவ மனைகளுக்குத் தேவையான எஃகு அறைகலன்கள். |
| (இ) சிறப்பு வகைத் தயாரிப்புகள் | ஆழ்துளை குழாய் கைப்பம்புகள், பெரும் ஆழத்திற்கான ஆழ்துளை குழாய் கைப் பம்புகள், பம்புகளின் உதிரி பாகங்கள், ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்ட மருத்துவ பொருட்களான சர்ஜிகல் ஸ்பிரிட், டி–நேச்சர்ட் ஸ்பிரிட், டிஞ்சர் செட்ரிமைடு, பொவிடோன் அயோடின், ஸ்பிரிட்டை அடிப் படையாகக் கொண்ட தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசிகளான லைசால், பெனாயில். |

## 4.4 கைவசமுள்ள பணி ஆணைகள்

அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்து சுமார் ரூ.47 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகளுக்கான ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

2018–19ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பெரிய அளவிலான ஆணைகளைப் பெற்று உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், தொடக்கப்பள்ளிகளுக்கு மாணவர் கணிதம் கற்கும் உபகரணங்களை ரூ.12 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்களை ரூ.2 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு தேவையான மின் கடத்தி பொருட்கள் ரூ.6 கோடி.
- காவல்துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.1.86 கோடி.

- பொது நூலகத்துறைக்குத் தேவையான எஃகு அலமாரிகள் ரூ.1.5 கோடி
- கல்லூரி கல்வித்துறைக்குத் தேவையான அறைகலன்கள் ரூ.1.8 கோடி

## 4.5 தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக, வர்ணங்கள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களை தயாரித்து வழங்குவதற்காக தொடங்கப்பட்டது. இந்நிறுவனம், 18.11.1985 முதல் அம்பத்தூரை, பதிவுபெற்ற தலைமையிடமாகக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்து கழகங்கள் மற்றும் தமிழக அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்குவதாகும்.

## 5. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN)

**முகவுரை**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) இலாப நோக்கமில்லா நிறுவனமாக தமிழக அரசால் **2001**ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழில் துவங்குவது முதல் சந்தைப்படுத்துதல் வரை தொழிலை வெற்றிகரமாக நடத்திட பல்வேறு பயிற்சிகளை தொழில் ஆர்வலர்கள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் தொழிற் குழுமங்களுக்கு வழங்கி வருகிறது. மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் மற்றும் புத்தாக்கத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்குத் தக்க ஆதரவு அளிக்கிறது. மாநிலத்தில் புத்தொழில் சூழலை உருவாக்குவதற்கான முதன்மை ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் செயல்படுகிறது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தொடங்கிய நாள் முதல் பல்வேறு துறைகளில் **2.33** இலட்சம் தொழில்முனைவோர்களுக்கு பயிற்சிகள் வழங்கி உள்ளது.

பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களின் எண்ணிக்கையில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் சீரிய முன்னேற்றங்கள் அடைய தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது. பயிற்சி அளித்தல், பங்குதாரர்களுடன் இணைந்து சேவை வழங்குதல், தொடர் அமர்வுகள் மூலம் சந்திப்புகள் நடத்திட வழிவகை செய்தல், புத்தாக்க மேம்பாடு மற்றும் அனுபவமிக்க தொழில்துறை வல்லுநர்களுடன் இணைந்து தொழில் ஊக்குவிப்பு சேவைகள் ஆகியவற்றின் மூலம் இந்நிறுவனம் தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நோக்கம், தொலைநோக்கு பார்வை மற்றும் முதன்மை கோட்பாடுகள் கீழ்க்கண்டவாறு:

## தொலைநோக்கு

தொழில்முனைவு மற்றும் புதிய வர்த்தக வாய்ப்புகள் / கண்டுபிடிப்புகள் சார்ந்த கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும்

செயல்பாடு போன்ற பல்வேறு துறைகளில் தமிழகத்தின் வள ஆதார மையமாக செயல்பட்டு தமிழகம் முழுவதும், தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் உள்ளடக்கிய ஒரு தொழில்முனைவு கலாச்சாரத்தை ஏற்படுத்தி வளர்ச்சி காண தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முனையும்.

**குறிக்கோள்**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வேகமான மற்றும் நீடித்த நிலைத்த தன்மையினை உள்ளடக்கிய வளர்ச்சிக்காக, தாக்கமிகு சிறந்த தொழில்முனைவு திறமைகளை ஏற்படுத்துதல், வர்த்தக பிணைப்புகளை உருவாக்குதல் மற்றும் பங்குதாரர்களை கொண்ட வர்த்தக அமைப்பை ஏற்படுத்துதல், உரிய ஆலோசனை வழங்குதல், பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், புத்தாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் வர்த்தக சேவைகளை வழங்கி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றிற்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வழிவகுக்கும்.

**முக்கிய பண்புகள்**

தொழில்முனைவு, நேர்மை, பாரபட்சமின்மை, காலந்தவறாமை, கூட்டு முயற்சி, மகத்தான சேவை, தலைமைப் பண்பு, புத்தாக்கம், தர உணர்வு ஆகிய முக்கிய பண்புகளை தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வளர்த்து வேரூன்றச் செய்யும்.

**தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கொள்கைகள்**

- புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு கலாச்சாரத்தினை தமிழ்நாடு முழுவதும் பரப்புதல்.
- ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினர்களிடையே தொழில்முனைவுத் திறனை கட்டமைத்தல்.
- தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில்முனைவோருக்கான தொழில் சூழலை விரிவாக்குதல்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்க செயலாக்கத்தில் ஏற்படும் தோல்விகளை குறைத்தல்.
    - முறைசார் பாடத்திட்டத்தில் தொழில்முனைவு கல்வியினை உட்புகுத்துதல்.

- தொழில்முனைதல் மற்றும் புத்தாக்கம் குறித்த ஆராய்ச்சி, கணக்கெடுப்புகள் மற்றும் வெளியீடுகள்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்கிடும் வகையில் இத்துறையில் ஈடுபட்டுள்ள அரசு மற்றும் அரசு—சாரா அமைப்புகள் இடையே வலுவான கூட்டுப் பங்காண்மை ஏற்படுத்துதல்.
- தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் குறித்த கொள்கை பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

**நிர்வாகம்**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், அரசு முதன்மைச் செயலர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையின் கீழ் செயல்படுகிறது. இந்நிறுவனம் அரசின் பல்வேறு முக்கியத் துறை செயலர்கள் மற்றும் தொழிற்துறை உறுப்பினர்கள் உள்ளடக்கிய ஆளுகைக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் நிர்வாகம் மற்றும் கணக்குப் பிரிவுகளுடன் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி திட்டப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

1) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்
2) ஒருங்கிணைப்பு மற்றும் திட்டங்கள்மேற்பார்வை
3) மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்
4) புத்தாக்கம் மற்றும் தொழில்அடைகாப்பகங்கள்
5) தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம்

**தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் செயல்பாடுகள்**

இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழ்க்கண்ட முக்கியப் பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## 5.1 தொழில்முனைவோர் மேம்பாடு

1. தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்
2. குழுமத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள்

## 5.2 புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

1. தமிழ்நாடு உற்பத்தி வணிக தொழில் அடைகாப்பக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்
2. ஆராய்ச்சி
3. மகளிர் தொழில்நுட்பமுனைதல்
4. உயிரி சார்ந்த தொழில்முனைதல்

5. மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டு திட்டம்
6. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்

**5.3 தகவல் தொடர்பு தொழில் நுட்பம்**

**5.4 சிறப்புத் திட்டங்கள்**

**5.5 நிதி நிலை**

## 2018–2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்

### 5.1 தொழில்முனைவோர் மேம்பாடு

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அனைவராலும் எளிதில் பின்பற்றக்கூடிய "*தொழில், வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த*" பயிற்சி அணுகுமுறையை கடைபிடிக்கிறது. அனுபவமிக்கத் தொழிற்துறை வல்லுனர்களின் வழிகாட்டுதல் மற்றும் தொடர் அமர்வுகள் மூலமாக பயிற்சிகள் அளித்தல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய முனைப்புகளுடன் புத்தாக்கச் சூழலை மாநிலம் முழுவதும் உருவாக்கி வருகிறது. இந்நிறுவனத்தின் பல்வேறு வகைப் பயனாளிகளான மாணவர் சமூகம், வளரும் தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்கள்

மற்றும் தொழிற் குழுமங்களின் தேவைகளுக்கேற்ப பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கான விரிவான மேலாண்மைத் திட்டம் **2016–2021**–ஐ செயலாக்கும் பொருட்டு பயிற்சி, எளிதான செயலாக்கம், வழிகாட்டுதல், தொடர்அமர்வு (Networking), கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் நடத்துதல், ஆவணப்படுத்துதல் ஆகிய உத்திகளைப் பயன்படுத்தி தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை உருவாக்குவதில் தொடர்புடைய பங்குதாரர்களுடன் இணைந்து தெளிவான திசையில் பயணிக்க இந்நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. தமிழகத்தில் தொழில்முனைவு சூழலை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கே உரித்தான அடையாளத்துடன் புதிய உத்வேகத்துடன், தரமான முடிவுகளை வெளிக்கொணர முயன்று வருகிறது.

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் **2018-2019**–ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு

### 5.1.1 தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்

விரிவான மேலாண்மைத் திட்டம் **2016-2021**ன் படி **2018-2019**ம் ஆண்டில் மொத்தம் **33,685** நபர்கள் இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ளார்கள். தொழில் ஆர்வலர்கள், வளர்ந்து வரும் தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே தொழில் புரிவோர் முதலானவர்கள் இதில் அடங்குவர். பல்வேறு தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ்க்கண்ட படிநிலைகளாக (Phased) நடத்தப்படுகிறது.

**முதல் கட்டம் (** கருத்துரு நிலை**)**

- ஒரு நாள் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கங்களுடன் இணைந்து **59** நகரங்களில் நடத்தப்பட்டன. இதில் தமிழ்நாடு முழுவதும் **6,220** ஆர்வமுள்ள தொழில்முனைவோர் கலந்து கொண்டனர்.

- ஆரம்ப, வளரும் நிலை தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே தொழில் புரிவோர்களுக்கு உதவும் பொருட்டு, ‘தொழில் உதவி மையம்’, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில் செயல்படுகிறது. மேலும், மாவட்ட அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர சங்கங்கள் வாயிலாக 9 மாவட்டங்களில் இம்மையம் இயங்கி வருகிறது. இவ்வாண்டில் 5,037 ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் தொழில் வழிகாட்டுனர்கள் மூலமாக வழங்கி உள்ளது.

- முன்னோடி விவசாயிகளுக்கு வேலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இரண்டு தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது. அதில் வேலூரில் 40 விவசாயிகளும், திண்டுக்கலில் 45 விவசாயிகளும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**இரண்டாவது கட்டம் (**தொழில் திட்டமிடல் நிலை**)**

ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தயாரித்த தொழில் வணிக மாதிரிகளை மதிப்பீடு செய்து, அவர்களின் தொழில் திட்ட அறிக்கையை மேம்படுத்தி அரசின் பல்வேறு கடனுதவி திட்டங்களில் பயன் பெற விண்ணப்பிக்க செய்தல். இதற்காக **6** முகாம்கள் நடத்தப்பட்டு **247** நபர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

**மூன்றாம் கட்டம் (**தொழில் தொடங்கும் நிலை**)**

- வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு திட்டம் (NEEDS), தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனத் (TAHDCO) திட்டம் போன்ற பல்வேறு அரசு கடனுதவித் திட்டங்களுக்கான இப்பயிற்சியில், சந்தை ஆய்வு, வணிக ரீதியிலான இணக்கம், செயல்பாட்டு

மேலாண்மை போன்ற தலைப்புகளில் கவனம் செலுத்தப்பட்டது.

- 2018-2019ம் ஆண்டில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் 788 நபர்களுக்கும், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (UYEGP) 4,613 பயனாளிகளுக்கும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் (TAHDCO) 996 நபர்களுக்கும் முறையே 15, 7 மற்றும் 6 நாட்கள் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- அனைவருக்கும் பொதுவான 15 நாள் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க ஆர்வமுள்ள 159 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**நான்காம் கட்டம் (**நடப்பு தொழில் முனைவோர்**)**

- இந்நிலையில், ஏற்கனவே குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நடத்துபவர்களுக்கு, அவர்களின் விருப்ப தேவைக்கேற்ப பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. ஒரு சுறுசுறுப்பான தொழில்முனைவோரின் தேவைகளுக்கு ஏற்றவாறு மிக நெகிழ்வான ஏற்றுக் கொள்ள கூடியவகையில் பயிற்சிகள் வடிவமைக்கப்படுகிறது. பயிற்சி காலம் அரை நாள் முதல் மூன்று நாட்கள் வரை பல்வகை தலைப்புகளுக்கு ஏற்றவாறு நடைபெறும். இது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் அன்றாட இயக்கம் மற்றும் எதிர்கால விரிவாக்கத்தைப் பொருத்து மாறுபடும்.

- வெற்றிகரமாக தொழில் புரியும் தொழில்முனைவோர்களைக் கொண்டு தத்தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் 'தொடர் அமர்வு சந்திப்புகள்' தொழில்முனைவோர் மேம்பாடு மற்றம் புத்தாக்க நிறுவன வளாகத்தில்

பிரதி மாதம் இரண்டாம் வெள்ளிக் கிழமை நடத்தப்படுகிறது.

- தொழில் ஊக்குவிப்பு சேவைகள் (Business Facilitation Services Programme) திட்டத்தின் கீழ், ஜூன் 2016 முதல் பிரதி வியாழக்கிழமை மாலை சென்னை மற்றும் 9 மாவட்டங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கங்களுடன் இணைந்து, 'நேருக்கு நேர் தொழில் வழிகாட்டி முகாம்' (One to one mentorship) நடத்தப்படுகிறது. இம்முகாம்களில் பல்துறை வல்லுநர்கள் உதவியுடன் புதிய தொழில் தொடங்க நாட்டம் உள்ளவர்களுக்கு தங்கள் திட்ட வரைவுகளை மேம்படுத்த தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக 5,037 வருங்கால தொழில்முனைவோரின் வணிக முன்மொழிவுகள் மற்றும் தொழில் விரிவாக்கத்தினை செம்மையாக்க தொழில் வல்லுநர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### 5.1.2 குழுமத்தொழில் மேம்பாட்டு திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நீடித்த நிலைத்ததன்மைக்கு முக்கிய உத்தி குழுமத்தொழில் மேம்பாடு ஆகும். தொழில் நிறுவனங்களில் உற்பத்தி திறனை பெருக்கவும், தரம் உயர்த்தவும், போட்டி விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் குழுமத்தொழில்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், குழும சிறப்பு நோக்கக்குழு உறுப்பினர்கள் (Special Purpose Vehicle) மற்றும் குழும உறுப்பினர்களுக்கு பல்வேறு நிகழ்சிகள், பயிற்சிகள், கருத்துப் பட்டறைகள், கூட்டங்கள் போன்ற பல்வேறு சேவைகளை அளித்து, குழும மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது. குறு மற்றும் சிறு குழும மேம்பாட்டு திட்டத்தின் மூலம் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள குழுமங்களுக்கு விழிப்புணர்வு, பரஸ்பர நம்பிக்கை, நீடித்த நிலைத்த குழுமத்திற்கான உருவாக்கம் போன்ற திறன்கள் உருவாக்கப்படுகின்றன. மேலும், குழுமத்தொழில்கள் வலுப்பெற வெற்றிகரமாக செயல்படும் குழுமங்களை சந்திக்கும் வாய்ப்பு, கண்டறியும் ஆய்வு அறிக்கை (DSR)திட்ட

அறிக்கை மற்றும் விரிவான திட்ட ஆய்வறிக்கை தயாரித்தல் போன்ற ஆதரவுகளும் அளிக்கப்படுகின்றன.

## குழுமத்தொழில் மேம்பாட்டு நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பட்டறை

இந்திய தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (அகமதாபாத்) உடன் இணைந்து குழுமத்தொழில் மேம்பாட்டு நிர்வாகிகளுக்கான ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் சென்னையில் நடத்தப்பட்டது. இதில் 21 நபர்கள் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டில் குழுமத்தொழில் சார்ந்த வளர்ச்சியினை முன்னெடுக்கும் பொருட்டு, இப்பட்டறை குழுமத்தொழில் சங்க அலுவலர்களுக்காக வடிவமைக்கப்பட்டு குழும மேம்பாட்டு முறைக்கான தகவல் பரவலாக்கத்தை மேம்படுத்தும் வகையில் நடத்தப்பட்டது.

## விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பயிற்சிப் பட்டறை

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்குழுமங்களின் மேம்பாட்டிற்கு பொது பயன்பாட்டுடன் கூடிய இயந்திர தளவாடங்கள் நிறுவுவதற்கு (Hard Intervention) விரிவான

திட்ட அறிக்கை தயாரிக்க மூன்று நாள் பயிற்சிப் பட்டறை குறு, சிறு தொழில் அறநிறுவனக் குழுக்களுடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நடத்தப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையில் 24 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

## சிக்கன உற்பத்தி (Lean Manufacturing) விழிப்புணர்வு முகாம்

சேலம் உற்பத்தித் திறன் குழுவுடன் இணைந்து இரண்டு நாள் சிக்கன உற்பத்தி விழிப்புணர்வு முகாம் மதுரையில் உள்ள தொழிற்குழுமங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளில் சிக்கன உற்பத்தி முறையை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்/ குழுமங்களில் நடைமுறைப்படுத்தும் விதத்தில் நடத்தப்பட்டது. களப் பயணத்துடன் கூடிய இந்த விழிப்புணர்வு முகாமில் 16 பேர் பங்கு பெற்று பயனடைந்தனர்.

## வடிவமைப்பு அம்சங்கள் மற்றும் மதிப்புக்கூட்டல் பயிற்சிப் பட்டறை

வடிவமைப்பு அம்சங்கள் மற்றும் மதிப்புக்கூட்டலுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறைகள் சென்னை, மதுரை மற்றும்

கோயம்புத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்/ குழுமத்தொழில்களின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்டன. தொழில்முனைவோருக்கு வடிவமைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் வடிவமைப்பு ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்த்துவது இப்பயிற்சியின் குறிக்கோளாகும். இப்பயிற்சிப் பட்டறையில் 52 பேர் பயனடைந்தனர்.

**நடப்புத் தொழில் நிலவரங்கள் மற்றும் உற்பத்தியின் மீதான அதன் தாக்கங்கள் குறித்த கருத்துப்பட்டறை:**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் 4ம் கட்ட பயிற்சியின் ஒரு பகுதியாக, குழுமத்தொழில்களுக்கான "சிக்கன தொழில் நுட்பங்கள் மற்றும் உற்பத்தியின் மீதான அதன் தாக்கம்" பற்றிய ஒரு நாள் பயிற்சிப் பட்டறை திருமுடிவாக்கம் சிட்கோ தொழில்பேட்டையில் நடத்தப்பட்டது. இதில் சிக்கன நடவடிக்கைகளால் உற்பத்தியை பெருக்க தேவையான அடிப்படை தகவல்கள் கொடுக்கப்பட்டன.

மேலும், வடிவமைப்பு மற்றும் மறுதோன்றி அச்சிடுதலில் (Offset print) உள்ள சமீபத்திய தொழில்நுட்பங்களை அறியும்

பொருட்டு ஒரு நாள் பயிற்சிப் பட்டறை கிருஷ்ணகிரி அச்சகத் தொழிற்குழும உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் அச்சகத் தொழிற்குழும உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் 70 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## குறு மற்றும் மரபுசார் தொழிற்குழுமங்களுக்கான விழிப்புணர்வு முகாம்

குறு மற்றும் சிறு தொழில் குழுமங்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் பயன்களை தெரிவித்து உற்பத்தித் திறன், தரம், சந்தைப் படுத்துதல் ஆகியவைகளை மேம்படுத்தும் பொருட்டு ஒரு நாள் விழிப்புணர்வு முகாம்கள் சென்னை, திருச்சி, திருப்பூர், ராமநாதபுரம், நாகர்கோவில் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்றன. இவ்விழிப்புணர்வு முகாம்கள் துருப்பிடிக்காத பாத்திர (Stainless Steel) உற்பத்தி நிறுவனங்கள், கோரைப்பாய்கள், மின்சாதன உற்பத்தி, முந்திரி பதப்படுத்துதல், மீன் வலை, இரப்பர், கயிறு மற்றும் அச்சகத் தொழில் நிறுவனங்களின் குழும உருவாக்கத்திற்காக மேற்குறிப்பிட்ட இடங்களில் நடத்தப்பட்டன. இவ்வாறான 6 விழிப்புணர்வு முகாம்களில், 423

தொழில்முனைவோர் கலந்து கொண்டு குழுமத்தொழில் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றனர்.

## 5.2. புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

### 5.2.1 தமிழ்நாடு உற்பத்தி வணிக/தொழிற்காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மிக முக்கிய தொலை நோக்குத் திட்டம், தமிழ்நாடு உற்பத்தி வணிக/தொழிற்காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டமாகும். சிறு தொழில் மற்றும் புத்தொழில் மேம்பாட்டிற்கான உரிய ஊக்கம் அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கால்நடை உயிரியல், வேளாண்காடுகள், தோட்டக் கலைத்துறை, வேளாண்மைத்துறை, மீன் வளத்துறை, மருந்தியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து போன்ற துறைகளில், வணிகக்காப்பகங்கள் அமைக்க நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டிலேயே முன்னோடியாக கால்நடை உயிரியல் மற்றும் வேளாண்காடுகள் குறித்த வணிக/ தொழிற்காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒன்பது

தொழிற்காப்பகங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அவற்றில் ஐந்து தொழிற்காப்பகங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன. இதற்காக ஒவ்வொரு தொழிற்காப்பகத்திற்கும் தலா **2.5** கோடி ரூபாய், மூன்று வருட காலங்களில் வழங்கப்படுகிறது.

மேலும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் - மேலாண்மை திட்டத்தின் கீழ் (EDII STRATEGIC PLAN) தொழிற்காப்பக மேலாண்மை பற்றிய கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன:

- தொழிற்காப்பக மேலாளர்களுக்கு இரண்டு நாள் ஆரம்பப் பயிற்சி, இந்திய தொழில்நுட்ப கழகம் - மெட்ராஸ் (IITM) ஆராய்ச்சிப் பூங்காவில் அளிக்கப்பட்டது.
- மேலும் PSG-STEP நிறுவனத்துடன் இணைந்து, காப்பக மேலாளர்களை கோவை, திருவனந்தபுரம், கொச்சின், ஈரோடு, பெங்களூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு செயல்படும் தொழிற்காப்பகங்களின் செயல்பாடுகளை அறிய நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- இந்திய தொழில்நுட்பக் கழகம் - மெட்ராஸ் தொழிற்காப்பகத்துடன் இணைந்து 'கற்றல் மற்றும் வழிநடத்துதலுக்கான' பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

### 5.2.2 ஆராய்ச்சி

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் நிலவும் சூழலை அறிந்து கொள்ளும் பொருட்டு, அது குறித்த ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முடுக்கி விட்டு இதன் முடிவுகளையும் விளைவுகளையும் தொழில்முனைவோர்கள் அறியச் செய்வது மிக அவசியமான ஒன்றாகும். இத்தகைய ஆராய்ச்சிகள் சரியான கொள்கை முடிவுகளை வகுக்கவும், தொழில்நுட்பமுனைதல் மற்றும் திறன் கட்டமைப்பில் உள்ள இடைவெளியைக் கண்டறிந்து, சரியான பயிற்சிகள் வழங்கவும் வழிவகை செய்கிறது. இத்தகைய இலக்குடன் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், பல்வேறு விதமான தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவான மத்திய, மாநில அரசுத் திட்டங்களின் செயலாக்கத்தின் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்யவும் எதிர்பார்த்த விளைவுகளை அடைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்வதற்கும் "தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்–2018" ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்கான உத்திகளை திட்டமிடவும் செயலாக்கவும் இவ்வாய்வறிக்கை தயாரிக்கப்பட்டது.

- பொருளாதார தாராளமயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதலின் காரணமாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் ஏற்பட்டுள்ள வாய்ப்புகளையும் சவால்களையும் இடையூறுகளையும் கண்டாய்ந்து அதற்கான தீர்வுகளை வழங்கும் விதத்தில் மின் நீர் இறைப்பான் மற்றும் பட்டாசு தயாரித்தல் ஆகிய தொழில் குழுமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

- புத்தொழில் வளர்ச்சியில் பல்வேறு நிலைகளான கருத்துரு நிலை, மதிப்பீட்டு நிலை, ஆரம்ப நிலை சந்தை கைப்பற்றுதல், உயர் வளர்ச்சி நிலை ஆகிய நிலைகளில் புத்தொழில் நிறுவனங்கள் எதிர்நோக்கும் வாய்ப்புகளையும் எதிர்கொள்ளும் சவால்களையும் புரிந்து கொள்வதற்கு, அனுபவத் தரவுகள் மூலமாக ஆராய 'தமிழகத்தில் புத்தொழில் சூழல்' என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொள்ள முன்மொழிவுகள் வரவேற்கப்பட்டன.

- தொழில்முனைதலில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை புகுத்திட IFMR LEAD என்ற நிறுவனத்துடன் இணைந்து "ஆராய்ச்சி முறைகள் மற்றும் வணிக மேம்பாடு" என்ற தலைப்பில் கருத்துப் பட்டறை நடத்தப்பட்டது.

- **புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம்** தமிழக அரசால் புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் தொழில் நிறுவனங்கள், கல்விப்புலம், அரசு ஆகியவைகள் இணைந்து நீடித்த நிலைத்த பங்கேற்பு

மூலம், அறிவியல் மற்றும் புத்தாக்கங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அதிகரிப்பதாகும். ஆண்டுதோறும் 400 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை நிதி உதவி வழங்கிட வழி வகுக்குப்பட்டுள்ளது.

### 5.2.3 மகளிர் தொழில்நுட்பமுனைதல்

இந்தியாவிலேயே மகளிர் தொழில்முனைவோர் எண்ணிக்கை தமிழ் நாட்டில் தான் அதிகமாகும். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதம் சார்ந்த துறைகளில் உள்ள மகளிர் தொழில்நுட்பத் திறனை வணிக மாதிரிகளாக உருவாக்குவதன் மூலம் அவர்களை ஆற்றல் படைத்தவர்களாக மாற்ற இயலும். மகளிர் தொழில்முனைதலில் தற்போதைய சூழல் குறித்த ஆராய்ச்சி மற்றும் குறிப்பிட்ட துறைசார் பயிற்சிகள் மூலம் மகளிருக்கான திறன்களை வளர்ப்பதற்கும், கொள்கை வடிவமைப்புக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றன. சமீப காலங்களில் மகளிரிடையே தொழில்நுட்ப முனைதலுக்கான மனநிலையை வளர்த்திட தொழில்

முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**ஆராய்வுகள்**

- தமிழ் நாட்டில் தொழில்முனைதலில் பயணிக்கும் மகளிர் சந்திக்கும் முக்கியமான இடர்பாடுகளை கண்டறிந்து தீர்வு காணும் நோக்கத்துடன் 'தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் மகளிரின் பங்கு–2018' என்ற விரிவான அறிக்கை தயாரித்து வெளியிடப்பட்டது.

- கற்ற மகளிரிடையே தொழில்முனைதல் உணர்வுகளை நிர்ணயிக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவைகளை மதிப்பீடு செய்யும் வகையில் இந்திய தொழில் நுட்ப கழகம்–மெட்ராஸ் கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வில் நிலப்பரப்புகள் வாரியாக நிலவும் தொழில்முனைவு சூழலில் பெண்களுக்கு ஏதுவான தொழில் தொடங்க ஏற்ற காரணிகளை கண்டறிந்து அதன் அடிப்படையில் அரசு கொள்கைகளை வகுத்து மகளிருக்கான

தொழில்நுட்பமுனைவுத் திட்டங்களை வடிவமைக்க பரிந்துரை செய்யப்படும்.

- **திறன் கட்டமைப்புத் திட்டங்கள்**

  - ‘வடிவமைப்பு’ குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு நாள் பயிற்சியும், அதன் தொடர்ச்சியாகப் புத்தொழில் முனைதலுக்கான முன்மாதிரிகள் உருவாக்கம் குறித்த ‘சவால் கலயம்’ (Sand Box) என்னும் மூன்று வார பயிற்சியும், இந்திய தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு மற்றும் உற்பத்திக் கழகம், (IIITDM) காஞ்சிபுரம் கல்வி நிறுவனத்துடன் இணைந்து மகளிருக்காக நடத்தப்பட்டது.
  - உணவு பாதுகாப்பு மற்றும் தர மதிப்பீடு குறித்த பயிற்சி, சிறுசேரியிலுள்ள பொன்விழா மகளிர் உயிரி தொழில்நுட்ப பூங்காவுடன் இணைந்து நடத்தப்பட்டது.

### 5.2.4 உயிரி தொழில் முனைதல்

தமிழ்நாட்டில் உயிரி தொழில்நுட்ப தொழில் சூழலை கட்டமைக்கவும், தொழில்முனைதலை மேம்படுத்தவும் தொழில்

முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தொழில்நுட்பமுனைவு பயிற்சிகள் மற்றும் செய்முறை பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

- இந்திய தொழில் நுட்பக் கழகம், மெட்ராஸ் உயிரி தொழிற்காப்பகத்துடன் இணைந்து 'இனக்கலப்பு புரத உற்பத்தி' என்ற தலைப்பில் பயிற்சி வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண் தொழில்முனைவோருக்கான தொழில் வணிக மாதிரி தயாரிப்பதற்கான செய்முறை பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.
- 'கல்விப்புலத்திலிருந்து உயிரி தொழில் மயமாக்குதலுக்கான உருமாற்றம்' என்ற சர்வதேச மாணவர் மாநாட்டை (அவிடதம் 2019) சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்தியது.

### 5.2.5 மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டம் (AIEDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கல்லூரிகள், பல்தொழில் நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையங்களுக்காக விரிவான திட்டத்தினை 2016–17 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இதன் நோக்கம் உயர் கல்வி நிறுவனங்களிலும் அதனை சார்ந்த இடங்களிலும் உறுதியான மற்றும் நேர்மறையான தொழில்முனைவு புத்தாக்க சூழலை உருவாக்குவதே ஆகும். இலக்கினை அடைவதற்கான இம்முயற்சியில், பயிற்சி நடத்துநர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்காக பல வகையான திட்டங்கள் தீட்டப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டமானது, மண்டல மையங்கள் மற்றும் உறுப்பு கல்வி நிறுவனங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. முன்னோடி கல்வி நிறுவனங்கள் மண்டல மையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டல மையமும் 25 முதல் 30 உயர் கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கல்லூரி உயர்நிலை மேலாண்

குழுவிற்கு விழிப்புணர்வு, கல்லூரி பயிற்றுநர்களுக்கு செய்முறை கற்றல் பயிற்சி மற்றும் மாணவர்களுக்கு தொழில்முனைவு குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்துடன் இணையதள பாடத்திட்டம், செய்முறைகள், கல்லூரி வளாகத்தில் சிறு தொழில்முனையங்கள் நடத்துதல், பல்வேறு கருத்துப்பட்டறைகள், கருத்தரங்குகள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான சவால் போட்டிகள் போன்றவற்றின் மூலம் மாணவர்களுக்கு தொழில் முனைவுத்திறன் மற்றும் படைப்பாற்றலை உருவாக்கும் திறனும் ஊக்குவிக்கப்படுகிறது. இந்நிதியாண்டு முடிய கீழ்க்கண்ட செயல்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளது:

- மாநிலத்தில் **9** மண்டல மையங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இம்மையங்கள் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் மொத்தம் **490** உறுப்பு கல்லூரிகள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளன.

- வாத்வானி–அறக்கட்டளை தேசிய தொழில் முனைவு வலையத்தால் (Wadwani Foundation-National Entrepreneurship Network) உருவாக்கப்பட்ட இணைய தள வழி பாடத்திட்டம் மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டத்தின் (AIEDP) மூலம் வழங்கப்படுகிறது. மண்டல மையங்களின் உறுப்பு கல்லூரிகளைச் சேர்ந்த **1001** பயிற்றுநர்களுக்கு இணைய வழி பாடம் நடத்தவும், 1,794 மாணவர் தொழில்முனைவோர் மையங்களின் தலைவர்களுக்கு (E-Leaders), மாணவர் தொழில்முனைவோர் மையங்களை (E-Cells) நடைமுறைப்படுத்தவும், தொழில்முனைவு சார்ந்த செயல்பாடுகளை கல்லூரி வளாகத்திற்குள் செயல்படுத்தவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள பாடதிட்டத்தில் **29,186**க்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து **6,859** பேர் முதல் நிலை பாடத்திட்டத்தினை நிறைவு செய்துள்ளனர்.

- தமிழ்நாடு திறந்தவழி பல்கலைக்கழகத்தின் மூலம் தொழில் முனைதலுக்கான ஆறு மாத கால சான்றிதழ் படிப்பு பிப்ரவரி **2019** ல் துவக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டத்தின் (AIEDP) கீழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாள் சிறப்பு பயிற்சி வடிவமைக்கப்பட்டு நடத்தப்படுகிறது. இதில் **6380** இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- **IEDP** கல்லூரிகள் தொழிற்சாலைகளுடன் இணைந்து செயல்பட விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "பல்கலைகழகம் – தொழிற்சாலை கூட்டாண்மை" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உயிரி தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை தொடர்பான நிகழ்ச்சிகள் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்டன.
- தொழிற்பயிற்சி மையங்களை (ITI) சார்ந்த **282** ஆசிரியர்கள் மற்றும் **515** மாணவர்களுக்கு

தொழில்முனைவுக்கான வாய்ப்புகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- **695** பள்ளி மாணவர்களுக்கு தொழில்முனைவுக்கான திறமைகளை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 5.2.6 தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)

மாநிலத்தில் புத்தொழில்களை ஊக்குவிக்க, ‘‘தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை **(2018–2023)**’’ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **19.01.2019** அன்று வெளியிடப்பட்டது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இக்கொள்கையின் மாநில ஒருங்கிணைப்பு முகமையாக இயங்கும். ‘‘தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்’’ உருவாக்கப்பட்டு இக்கொள்கை செயல்படுத்தப்படும். தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் **(EDII)**, பல்கலைகழகம் மற்றும் தன்னாட்சி கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் தொழில்முனைவுக்கான பாடத்தையும் சேர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன **(EDII)** மேலாண்மை திட்டத்தின் **(Strategic Plan)** ஒரு பகுதியாக தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள் (TNSI) மற்றும் தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டிகள் (TNIGC) போன்ற தொடக்கநிலை புத்தொழில் தொடங்குவதற்கான மேம்பாட்டு திட்டங்கள், புத்தாக்கப் போட்டிகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- 2016-17ஆம் ஆண்டு முதல் **79** அணிகளுக்கு அவர்கள் வடிவமைத்த முன்மாதிரிகளை (Prototype) மேம்படுத்துவதற்கு ரூ.**82** இலட்சம் ஊக்கமானியம் மற்றும் ரொக்கப் பரிசு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஊக்கமானியம் மற்றும் ரொக்கப் பரிசாக ரூ.10,000/- முதல் ரூ.**5** இலட்சம் வரை மேற்கண்ட அணிகளுக்கு வழங்கப்படுகிறது.

- மாணவர்களிடையே புதுமையை ஊக்குவிப்பதற்காக **தமிழ்நாடு மாணவ கண்டுபிடிப்பாளர்கள்–2018 (TNSI-2018) திட்டம்** தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு முகாம்கள் (Awareness Camp), புதிய

யோசனைகளை உருவாக்கும் முகாம்கள் (Ideation camp), செய்முறைப் பயிற்சி முகாம்கள் (Boot Camp), மற்றும் இறுதிச்சுற்று (Final Pitch) ஆகியவை நடத்தப்பட்டது. விதைமானியமாக ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- வரை 18 அணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- நடப்பாண்டில் **தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டிகள்–2018 (TNIGC-2018)** நடத்தப்பட்டன. அதில் 21 அணிகள் பங்கேற்றன. இதன் கீழ் தீர்வுகாண் போட்டிகள், செய்முறைப் பயிற்சி முகாம்கள் மற்றும் இறுதிச் சுற்று பிப்ரவரி 2018இல் நடத்தப்பட்டது. ஊக்கமானியமாக ஐந்து அணிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.

- ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரியின் தொழில்நுட்ப வணிகக்காப்பகம் மூலம் நடத்தப்பட்ட “ஸ்டார்டப் மேனியா” போட்டியில் வெற்றி பெற்ற 3 மாணவர் அணிகளுக்கு தொழில்முனைவோர்

மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் விதைமானியமாக ரூ.**1** இலட்சம் வழங்கப்பட்டது.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதி உதவியுடன் சென்னை அண்ணா பல்கலைகழக மாணவர்கள் தொழில்முனைவு மையத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட 'எனந்த்ரா பிட்ச் பெஸ்ட்– (Enantra Pitch Fest) போட்டியில் வெற்றி பெற்ற **5** அணிகளுக்கு மொத்தம் ரூ.6.75 இலட்சம் விதைமானியம் வழங்கப்பட்டது.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் **(EDII)** நிதி உதவியுடன் "E-Summit 2019" நிகழ்வு தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைகழகத்தின் மாணவர் தொழில்முனைவோர் மையத்தால் 22 - 24 பிப்ரவரி 2019 இல் நடத்தப்பட்டது.

- தியாகராசர் பொறியியல் கல்லூரி, மதுரை மையம் மற்றும் அண்ணா பல்கலைகழகம், திருச்சி மையம் ஆகியவற்றில் **6** நாட்கள் புத்தாக்க தொழில் ஊக்கப் பயிற்சி **(Startup Acceleration)** தொழில்முனைவோர்

மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் **81** மாணவர்கள் பங்கேற்றனர்.

- **புத்தொழில் உலா (Startup Ula) –** மாநிலத்தில் புத்தொழில் சூழலுக்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி மேம்படுத்தும் பொருட்டு, புத்தொழில் உலா என்னும் பயணம் புத்தொழில்முனைவோர் களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்நிகழ்வில், பரஸ்பர கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் பரிமாறும் பொருட்டு வெற்றிகரமாக இயங்கும் பல்வேறு புத்தொழில் நிறுவன நிர்வாகிகளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த உலா பயணத்தினூடே அரசாங்க சலுகைகள், நிதி உதவிகள், புத்தொழில் வழிகாட்டுதல், சந்தைப்படுத்துதல், தொழில்நுட்பம் போன்ற அம்சங்கள் பயணித்தவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது. கோயம்புத்தூரிலிருந்து சென்னை மற்றும் திருநெல்வேலியில் இருந்து சென்னை வரையிலான இரு புத்தொழில் உலாக்கள் நடத்தப்பட்டன. இவ்விரண்டு உலாக்களிலும் தமிழகம்

முழுவதும் இருந்து **55** புத்தொழில்முனைவோர்/ புத்தொழில் தொடங்க எண்ணமுடையவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் **(EDII) SPI** சினிமாஸ் இணைந்து "கோ கிரியேட்–**19**" நிகழ்வு நடத்தப்பட்டது. மனித இயல்புடன் கூடிய கூட்டு வடிவமைப்பு முயற்சியில் Massachusetts Institute of Technology, USA லிருந்து பேராசிரியர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த மாணவர்களும், தமிழ்நாட்டிலிருந்து தொழில் முன்னோடிகள், பெருநிறுவன நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறை தீர்வுகளை வழங்குவதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். இதில் **80** நபர்கள் பங்கேற்றனர்.

- மேலும் **2018–19** ஆம் ஆண்டில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பின்வரும் நிகழ்வுகளுக்காக ஆதரவு அளித்தது.

- சென்னையை சார்ந்த வெற்றிகரமாக செயல்படும் மென்பொருளை சேவையாக (SaaS) வழங்கும் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட “SaaS Boomi” நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் நோக்கம் தமிழ்நாட்டில் மென்பொருளை சேவையாக வழங்கும் நிறுவனங்கள் தனது சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு புதிய தொழில் நுட்பத்தை உருவாக்க உதவுதல் ஆகும். இந்நிகழ்வானது 18-19 ஜனவரி **2019** அன்று நடத்தப்பட்டது.

- பருவநிலை மாற்றம் குறித்த “Climate Launch Pad” நடத்திய தேசிய அளவிலான இறுதி போட்டி **22.9.2018** அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

- புத்தொழில்களுக்காக சிஐஐ (CII) தென் மண்டலத்துடன் இணைந்து **20.9.2018** அன்று “ஸ்டார்ட்அப்பிரீனர்ஸ்” (Startuppreneurs) மாநாடு நடத்தப்பட்டது.

- ஸ்காட்லாந்து எடின்பர்க் நகரில் **2018** ஆம் ஆண்டு **1** மற்றும் **2** நவம்பர்–ல் நடைபெற்ற உலகளாவிய

Climate Launch Pad நிகழ்வின் இறுதிப் போட்டியில், தமிழ்நாட்டிலிருந்து தேசிய அளவில் வெற்றி பெற்ற இரண்டு புத்தொழில் நிறுவனங்கள் கலந்து கொள்ள ஆதரவு அளிக்கப்பட்டது. 50 நாடுகளிலிருந்து 135 அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டியில் தமிழ்நாட்டிலிருந்து கலந்து கொண்ட புத்தொழில் நிறுவனமான M/s.JSP அணி இரண்டாம் இடத்தை பெற்று வெற்றி பெற்றது.

## 5.3. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்

- தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு, பொது மக்களிடையே தகவல்களை பரவலாக்கும் வகையில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சமூக வலைதளங்கள், மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் என விரிவான தகவல் தொடர்பு உத்திகளை உருவாக்கியுள்ளது. இந்நிறுவனத்தின் வலைதளம் (www.editn.in) புதிய தொழில்முனைவோருக்கு விரிவான பயனுள்ள

பல தகவல்களைக் கொண்டுள்ளது. மேலும் முகநூல், டிவிட்டர் மற்றும் யூடியூப் பக்கங்கள் வாயிலாக மக்களுக்கு தகவல்கள் தொடர்ந்து பரவலாக்கம் செய்யப்படுகிறது. இதன் மூலம் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு கொண்டு செல்வதுடன் தகவல்களையும் வழிகாட்டுதலையும் பெற வழிவகை செய்கிறது. பயிற்சிகளுக்கு இணையத்திலேயே பதிவு செய்யும் வசதியையும், பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு மின்னணு பயிற்சி சான்றிதழையும் இணையம் மூலமே வழங்குகிறது. அவ்வாறு வழங்கப்படும் மின்னணு சான்றிதழ்களை இணைய தளத்திலேயே சரிபார்த்து உறுதிசெய்து கொள்ளலாம்.

### 5.3.1 பெருந்திரள் தகவல் தொடர்புத் திட்டம்

- **அகில இந்திய வானொலி நிகழ்ச்சி –** தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தொடர் வாராந்திர நிகழ்ச்சியான ‘தொழிலும் வாழ்வும்’ அகில இந்திய வானொலியின் ரெயின்போ பண்பலையில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை **4.45 – 5.00** மணி வரை ஒலிபரப்பாகிறது. இதுவரை **47** ஒலிபரப்புகள் நிறைவடைந்துள்ளன. EDII–TN மூலம் பயிற்சி பெற்று தொழில் தொடங்கி வெற்றிகரமாக செயல்படும் தொழில் முனைவோர்களின் சாதனைகள் மற்றும் அரசின் திட்டங்களான UYEGP, PMEGP, NEEDS மற்றும் THADCO போன்றவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப் படுகிறது.

- **சென்னை தொலைக்காட்சியின் பொதிகை நிகழ்ச்சி –** தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் **‘நிமிர்ந்து நில்’** என்னும் தலைப்பில் பொதிகை அலைவரிசையில் வாரந்தோறும் சனிக்கிழமை முற்பகல் **11.30** முதல் **12.00** மணி வரை

**26** நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தொழில் முனைதலுக்குத் தேவையான பல்வேறு அம்சங்களான சுயதொழிலுக்கான வாய்ப்புகள், அரசின் உதவிகள்/ திட்டங்கள், தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், துறைசார் வாய்ப்புகள், ஏற்றுமதி சந்தை போன்றவை எடுத்துரைக்கப்பட்டன. நிகழ்ச்சியைப் பார்த்த நேயர்களிடமிருந்து பெற்ற தொலைபேசி அழைப்புகளும், அலுவலகத்திற்கு நேரடியாக வருகை புரிந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களும் நிகழ்ச்சியின் வெற்றிக்குச் சான்றாக அமைந்தன.

### 5.3.2 சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நாள் கொண்டாட்டம்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அறிவிப்பின்படி ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27ஆம் தேதி சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளாக கொண்டாடப்படுகிறது. இதன் நோக்கம் புதிய சர்வதேச வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதாகும். தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்,

